உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவஜயம்

வில்லி பாரதத்தில் சிவபெருமான் பெருமை

சங்கரனடிமை ஆங்கிரஸ சர்மா

சிவஞான பூஜா மலர் குரோதன ஆண்டு - (1985)
பிரசுரம்: **ஆங்கீரஸ s. வேங்கடேச சர்மா**, மேலமாம்பலம், சென்னை - 600 033]

வில்லிபாரதம் என்பது வில்லிபுத்தூரார் எனவும் வில்லி புத்தூராழ்வார் எனவும் வழங்கப்படும் ஒரு பெரும்புலவரால் இயற்றப்பட்ட தமிழ் பாரத நூல் ஆகும். வடமொழியில் வேதவியாஸர் என்ற மாமுனிவரால் ஆக்கப்பட்ட மஹாபாரதம் என்ற பேரிதிகாசத்தை இப்புலவர் பெருமான் தமிழ் விருத்தப்பாக்களினால் பாடியுள்ளார். வால்மீகி ராமாயணத்தைத் தமிழில் பெருங்காப்பியமாகப் பாடிய கம்பர், கவிக்கூற்றாகவும் கதாபாத்திரங்களின் வாயிலாகவும், எங்ஙனம் சிவபிரான் பெருமையைப் பாடியுள்ளார் என்பதைக் கிருட்டினகிரிப் பேராசிரியர் வித்துவான் திரு பெ.கு. வரதராசனார் அவர்கள் சில ஆண்டுகளாக நமது மலர்களில் தொடர் கட்டுரைகள் மூலம் விளக்கி வருவதை வாசகர்கள் படித்து இன்புற்று வருகின்றார்கள். அதே முறையில், வில்லிபுத்தூராழ்வார் தாம் மிக அழகாகப் பாடியுள்ள பாரதக் காப்பியத்தில் தம் கூற்றாகவும் பாத்திரங்களின் கூற்றாகவும் சிவபிரானை எங்ஙனம் போற்றிப் பாடியுள்ளார் என்பதைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

வில்லிபுத்தூரார் நடுநாடென்று வழங்கிய திருமுனைப்பாடி நாட்டில் (இப்பொழுதைய தென்னாற்காடு மாவட்டம்) வீரராகவாசாரியார் என்ற திருமண் இடும் வைணவப் பிராமணருக்குக் குமாராய்ப் பிறந்தவர். இவரது இயற்பெயர் வில்லிபுத்தூராழ்வார் என்பதாம். இவர் கல்வி கேள்விகளில் மிக்கவராய், அக்காலத்தில் கல்விச் செருக்கடைந்திருந்த புலவர்களைத் தம் பெரும் புலமைத் திறத்தால் வென்று அவ்வெற்றியின் சின்னமாகத் தோற்றுப்போன புலவர்களின் காதுகளைத் துறட்டுக் கோலால் மாட்டியிழுத்து அறுத்துவந்தார் என்றவொரு செய்தியும் "....குறும்பியளவாய்க் காதைக் குடைந்து தோண்டி, எட்டினமட்டறுப்பதற்கோ வில்லியில்லை..." என்ற ஒரு தனிப்பாடற்பகுதியால் தெரிய வருகிறது. பின்னர் இவர் அருணகிரிநாதரோடு அவர் பாடிய கந்தரந்தாதிக்குப் பொருளுரைக்கும் போட்டியில் ஈடுபட்டு அவரிடம் தோற்றுப் போனார் என்றும்

தெரிய வருகிறது. இவரது காலம் கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியாம் என்று கூறுவர்.

இத்தகைய பெரும் புலவராகிய வில்லிபுத்தூராரை, அக்காலம் திருமுனைப்பாடி நாட்டை வக்கபாகை என்னுமுரைத் தலைநகராகக் கொண்டு அரசுபுரிந்து வந்த வரபதியாட் கொண்டான் என்னுமரசன் தனது அவைக்களப் புலவராக்கி ஆதரித்து வந்தான். அங்ஙனமிருக்கையில் ஒரு சமயம் அரசன் வடமொழியில் வியாஸ முனிவரால் மிக விரித்துரைக்கப்பட்ட மஹாபாரதத்தைச் செந்தமிழில் விருத்தப்பாக்களால் சுருக்கமாக ஒரு காப்பியமாகப் பாடவேண்டுமென்று இவரைக் கேட்டுக்கொள்ள அவ்வண்ணமே இவர் சொற்சுவை, பொருட்சுவை மிக்க நாலாயிரத்து முன்னூற்று முப்பத்தியாறு பாடல்களினால் இந்நூலைப் பாடினார் என்று கூறுவர். [இவர் இந்நூலைப் பாடியது பற்றி வேறு வகையான கதையும் வழங்குகிறது. நமது ஆராய்ச்சிக்கு அக்கதை மிகையாதலால் இங்குக் குறிப்பிடாது விடுத்தோம்].

வில்லிபுத்தூராருக்கு திருக்குறள் சொன்ன முறையில் மகன் தந்தைக்காற்றும் உதவியைச் செய்த குமாரர் **வரந்தருவார்** (வரதன் என்ற வடமொழிச் சொல்லின் தமிழாக்கம்) இருந்தார். பெரும் புலவராய்த் திகழ்ந்த வரந்தருவார் தமது தந்தையாரின் அரிய நூலுக்குச் சிறந்த்தொரு பாயிரம் வழங்கித் தந்தையைச் சிறப்பித்துத் தானும் புகழ் பெற்றார். இருபத்துநாலு பாடல்கள் கொண்ட இப்பாயிரத்தில் ஒரு பாடலில் சிவபிரான் பெருமையையும் அப்பெருமையை உலகறியக் காட்டிப் பாடிய தேவார ஆசிரியர் மூவரையும் வாய் கொள்ளாமல் போற்றிப் புகழ்ந்துள்ளார். இதோ அப்பாடல்: -

பாவரும் தமிழால் பேர்பெறு பனுவல்
பாவலர் பாதிநாள் இரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக்கு ஏற்றி
முகுந்தனைத் தொழுதநன் னாடு;
தேவரும் மறையும் இன்னமும் காணாச்
செஞ்சடைக் கடவுளைப் பாடி
யாவரும் மதித்தோர் மூவரில் இருவர்
பிறந்தநாடு இந்த நன்னாடு.

(சிறப்புப்பாயிரம், 9-ம் பாடல்)

இப்பாடலில் முதலிரண்டு அடிகளில் முதலாழ்வார்கள் எனப்படும் மூன்று வைணவ ஆழ்வார்களைச் சிறப்பித்தார். வைணவராகிய வரந்தருவாருக்கு இது தக்கதே. மூன்றாம் அடியில் சிவபிரானை “தேவரும் மறையும் இன்னமுங் காணாச் செஞ்சடைக் கடவுள்” என்று இவர் பாடியது தான் குறிப்பிடத்தக்கது. திருமாலும்

நான்முகனும் தேடி அடிமுடி காணாத சிவபெருமான் என்ற குறிப்பு **தேவரும்** என்ற சொல்லால் பெறப்படுவது காண்க. "காணாச் **செஞ்சுடர்க் கடவுள்**" என்று ஒரு பாட பேதமுண்டு. இப்பாடபேதப்படி இக்கருத்து மேலும் உறுதிப் படுகின்றதன்றோ? "திருமாலும் நான்முகனும் தேர்ந்துணராது அன்று அங்கு, அருமாலுற அழலாய் நின்ற பெருமான்" என்ற சேரமான் பெருமான் நாயனாரின் வாக்கை நினைவு கூறச் செய்கின்றதன்றோ? மேலும் இவர் இப்பாடலில் திருமாலைக் குறிப்பிடும் போது 'முகுந்தனைத் தொழுத' என்ற பெயர் மட்டுமே கூறி, சிவபிரானைக் கூறும் போது 'தேவரும் மறையும் இன்னமுங் காணாச் செஞ்சடைக் கடவுள்' என்று சிறப்பித்துக் கூறியது இவரது மெய்ப்பொருள் உணர்ந்த உள்ளத்தைப் புலப்படுத்துகின்றதல்லவா?

அடுத்த நான்காமடியில் அந்தக் கடவுளைப் பாடி அதன் காரணத்தால் யாவராலும் மதிக்கப் பெற்ற மூவரில் இருவர் பிறந்த நாடு என்று திருமுனைப்பாடி நாட்டைச் சிறப்பிக்கின்றார். மூவர் என்றது திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியவராம். இவர்களில் இருவராகிய அப்பரும், சுந்தரரும் இந்த நாட்டிலே அவதரித்தவர்கள். இவ்விருவரும் அவதரித்த காரணத்தால் அந்த நாடு பெருமையடைந்தது என்பது புலவரின் பாடற்கருத்து. இக்கருத்து சேக்கிழார் பெருமானின் கீழ்க்கண்ட பாடலின் பொருளை ஒத்து இருப்பதும் கண்டு இன்புறௌக. இதனால் இப்புலவர்பெருமான் சிவபிரானை எந்த அளவுக்குப் போற்றுவதில் ஈடுபட்டு இருந்தார் என்பது மட்டுமல்லாமல் மூவர் முதலிகளது தேவாரப் பாடல்களையும், சேக்கிழார் பெருமானின் பெரிய புராணத்தையும் நன்கு கற்றுத் துறைபோனவர் என்பதையும் ஊகித்து உணரலாம். திருமுனைப்பாடி நாட்டினைப் போற்றிய சேக்கிழாரின் தெய்வமணங் கமழும் பாடலையும் இதோ பாருங்கள். இதனை அடையொற்றியது போலிருக்கும் கருத்துடைய வரந்தருவார் பாடலுடன் ஒப்பிட்டு மகிழுங்கள்.

மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மை நெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்மளவோ பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு.

திருநாவுக்கரசரும் (அப்பர்) சுந்தரரும் பிறந்ததனால் திருமுனைப்பாடி நாட்டுக்குப் பெருமை என்ற இப்பாடற் கருத்தைத்தான் மூவரில் இருவர் பிறந்த நன்னாடு எனத் தம் பாடலில் வரந்தருவார் போற்றினார் எனக் கொள்க.

மகனாரகிய வரந்தருவாரது உண்மையறிவையும் சிவபிரானையும் அவனடியார்களையும் மனமாரப் போற்றும் உயர்ந்த பண்பினையும் சிறிது கண்டோம். இனித் தந்தையாராகிய நூலாசிரியர் வில்லிபுத்தூராரின் பாரதப்

வில்லி பாரதத்தில் சிவபிரான் பெருமை

பெருங்காப்பியத்துள் நுழைந்து ஆண்டுக் கமழும் சிவமணத்தை நுகர்ந்து ஆனந்தமடைவோம். அதற்கு முன்னாகச் சில செய்திகளை நாம் நினைவிற் கொள்வது நலம். சைவர் எனக்கருதப்படுகிற கம்பர் தாம் பதினாயிரம் பாடல்களில் பாடிய இராமாயணத்தில் சிவபிரானை 395 பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் 4336 பாடல்களில் பாரதம் பாடிய, நாமமிடும் பரம வைணவராகிய வில்லிபுத்தூரார் சிவபிரானை 270 இடங்களில் பாடியுள்ளார். எனவே விகிதப்படி கணக்கிட்டால் வைணவ வில்லிபுத்தூராரே சைவக் கம்பரை விடச்சிவபெருமானை அதிகமாகப் பாடியுள்ளார் என்பதை அறிந்து கொள்ளலாம். இந்த 270 இடங்களிலும் வில்லியார் கவிக்கூற்றாக மட்டும் கூறியுள்ள இடங்கள் 199 ஆகும். வில்லிபுத்தூராரின் சிவவுணர்வுக்கு இது மேலும் சான்றாகும்.

மற்றுமொரு விஷயத்தையும் நினைவுபடுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம். வில்லிபுத்தூரார் நாமம் தரிக்கும் வைணவ குலத்துப் பிறந்தவர். அக்குலத்து வழிபடு கடவுள் ஆதலாலும், நாம் பாடும் காப்பிய நாயகர்களான பாண்டவர்க்கு உறவும் நட்புமாகி அவர்களுடனே இருந்து உற்றுழி உதவியவர் என்பதாலும் திருமாலையும் அவரது பூரண அம்சமாக வைணவர்களால் போற்றப்படும் ஸ்ரீகிருஷ்ணனையும் காப்பியத்தில் பல இடங்களில் பலவாறாக இவர் துதித்திருப்பது இவருக்குப் பொருந்துவதேயாம். ஆனால், அந்த காப்பிய நாயகர் ஐவர்க்கும், கண்ணனுக்கும், திருமாலுக்கும், மற்றும் அனைவர்க்கும் வழிபடும் மேலான தெய்வம் சிவபிரானே என்ற மெய்யுணர்வினைத் தமது கூர்த்த மதியினால் பெற்றுச் சிவபிரானைத் தம் கூற்றாகவும் பாத்திரங்களின் வாயிலாகவும் போற்றிப் பாடியிருப்பது இவரது பெருமைக்கும் நடுநிலை தவறாத உள்ளத்துக்கும் சிறந்த சான்றாகின்றது. திருமால் தொடர்பான காப்பியத்தைப் பாடவந்த திருமாலடியாரான இவர் சிவபிரானைப் பாடாதிருக்கவோ, பாட மறக்கவோ இயலாத உள்ளத்தினராய் இருந்தார் என்பதையும் நாம் ஊகித்து உணரலாம். இனிக்காப்பியச் சோலைக்குள் நுழைவோம்.

வியாஸ பாரதம் 18 பருவங்கள் கொண்டதென்றாலும் இவர் பாடியது 10 பருவங்களேயாகும். இந்தப் பத்துப் பருவங்கள் ஒவ்வொன்றிலும் நுழைந்து நுணுகிப் பாதர்க்கும் கடப்பாட்டினையுடைய நாம் ஆதி பருவத்தில் கவிக்கூற்றாக உள்ள சிவபிரான் பெருமையை மட்டும் இம்மலரில் காண்போம்.

வில்லிபுத்தூரார் தம் நூலுக்குத் தாம் பாடிய தற்சிறப்புப் பாயிரத்தில் முதலில் விநாயகப் பெருமானுக்கு வணக்கஞ் செய்துள்ளார். இது வைணவ மரபுக்கு ஒவ்வாதது.

நீடாழி யுலகத்து மறைநாலொ(டு)
ஐந்தென்று நிலைநிற்கவே

வாடாத தவவாய்மை முனிராசன்
மாபார தஞ்சொன்ன நாள்
ஏடாக மாமேரு வெற்பாக
வங்கூரெ ழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்
பணிந்தன்பு கூர்வாமரோ.

(தற்சிறப்புப்பாயிரம், கடவுள் வாழ்த்து)

இப்பாடலில் தன் காப்பியம் இடையூறின்றி இனிது முடியச் சைவ மரபினையொட்டி விநாயகப் பெருமானை வணங்கியுள்ளது இன்புறுதற்குரியது. "மாபாரதம் சொன்ன நான் எழுதும் பிரான்" என்று விநாயகரைக் கூறியதனால், யான் தமிழ்ப் படுத்தும் இதனையும் இடையூறு இன்றி முடியுமாறு அவன் அருள்வான் என்ற கருத்துக் குறிப்பிக்கப்படும் என்று உரைகாரர் திரு வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் (இவரும் வைணவரே) தம் உரை விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளதும் இங்குக் கருத்திற் கொள்ளத்தக்கதாம். இன்னொரு பாடலும் விநாயகர் வணக்கமாகவே இப்பகுதியில் காணப்படுகிறது.

தற்சிறப்புப் பாயிரமென்ற இப்பகுதியில் அடுத்து முதற் கடவுளின் வாழ்த்து என்ற தலைப்பில் உள்ளது பின்வரும் பாடல்.

ஆக்கு மாறய னாமுத லாக்கிய உலகம்
காக்கு மாறுசெங் கண்ணிறை கருணையங் கடலாம்
வீக்கு மாறர னாமவை வீந்தநாள் மீளப்
பூக்கு மாமுத லெவனவன் பொன்னடி போற்றி.

(தற்சிறப்புப்பாயிரம், கடவுள் வாழ்த்து:3)

"உலகத்தைப் படைக்கின்ற பிரமனாகவும், அப்படிப் படைத்த உலகத்தைக் காக்கின்ற சிவந்த கண்களை உடைய கருணைக் கடலாகிய திருமாலாகவும், அந்த உலகத்தை அழிக்கின்ற அரனாகவும், அவ்வுலகம் அழிந்த காலத்து அதனை மீளவும் உண்டாக்கும் சிறந்த முதலவனாகவும் உள்ளவன் எவனோ, அவனுடைய பொன் போன்ற திருவடிகட்கு வணக்கம்" என்பது மேற்படி பாடலின் பொழிப்புரையாகும். இப்பாடலில் வில்லிபுத்தூரார் அயன், அரி, அரன் என்ற மூவரையும் அவர்தம் தொழிலாகிய ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் குறிப்பிட்டு, நான்காவதாக "மீளப் பூக்கும் மாமுதல்" எனப் பாடியுள்ளார். வைணவ வழக்கில், அயன், அரன், அரி என்ற மூவரே உண்டு. அம்மூவரில் அரி உயர்ந்தவன் என்பது வைணவர் தம் கொள்கை. நான்காவதான துரியமூர்த்தி வைணவ சம்பிரதாயத்தில் உளதாக நாமறிந்த வரையில் தெரியவில்லை. சைவ சம்பிரதாயத்தில் தான் அயன், அரி, அரன், மகேசுரன், ஸதாசிவன் என்ற ஐந்து மூர்த்திகள் உள்ளனர். இவரது

தொழில் முறையே ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பதாம். மூன்றாவதான அழித்தலிலேயே மறைத்தலையுமடக்கி, ஐந்தாம் மூர்த்தியையே நான்காம் மூர்த்தியாகக் கொள்வதுமுண்டு. அந்த முறையில் அனுக்கிரஹம் என்றும் அருளல் என்றும் வழங்கும் ஐந்தாவது தொழிலைச் செய்யும் ஸதா சிவனையே மீளப்பூக்கும் மாமுதல் என்று இங்குக் கவி பாடியுள்ளார் என்று கோடலே ஏற்புடையதாகும்.

இத்தற்சிறப்புப்பாயிரப் பகுதியிலேயே தாம் பாரதம் பாட இசைந்ததன் காரணத்தைக் கவி ஒரு பாடலால் விளக்குகிறார். அக்கவி வருமாறு: -

முன்னு மாமறை முனிவருந் தேவரும் பிறரும்
பனனு மாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன்
மன்னு மாதவன் சரிதமு மிடையிடை வழங்கும்
என்னு மாசையால் யானுமீ தியம்புதற் கிசைந்தேன்.

(தற்சிறப்புப்பாயிரம் 8-ம் பாடல்)

இப்பாடலில் மூன்றாமடியில் உள்ள ‘மன்னு மாதவன்’ என்பதை ‘மன்னு-மா-தவன்’ எனப் பிரித்து பெருமை பொருந்திய திருமகளின் கொழுநனாகிய திருமாலின் கதை இக்காப்பியத்தின் இடையிடையே வழங்கும் என்னும் ஆசையால் பாடலுற்றேன் என்று கவி கூறுவதாக உரைகாரர் திரு. வை,மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கூறுகின்றார். அது பொருந்துவதே ஆயினும் இதே சொற்றொடரை ‘மன்-உமா-தவன்’ எனப் பிரித்து, இரட்டுறமொழிதல் என்னும் உத்தியல், நிலைபெற்ற உமாதேவியாரின் கணவனாகிய சிவபெருமானின் கதைகளும் இடையிடையே வழங்கப் பெறுதலால் யானும் இப்பாரதம் பாட இசைந்தேன் என்றும் கடி கூறுவதாகக் கொள்ளலாம் என்பதை உரைகாரர் எடுத்துக்காட்டினாரில்லை. சிவபிரான் சரிதங்களும் பாரதத்தில் இடையிடையே வழங்கி வருதலை யாரோ மறுக்க வல்லார்?

இனி, மாபாரதம் முதல் பருவமான ஆதி பருவத்தில் முதலாவதான குருகுலச்சருக்கம் ஆரம்பமாகின்றது. சந்திர குலத்தில் பிறந்த குரு என்ற பிரசித்தி பெற்ற அரசனின் குலத்தைப் பற்றிய சரிதமடங்கிய சருக்கம் (நூலின் உட்பிரிவு) என்பது இதன் பொருள். குருகுல முதல்வனான சந்திரனைப் பாட வந்த புலவர், அச்சந்திரனைச் சிரத்தில் சூடியருளிய சிவபிரான் பெருமையைப் பாடி அப்பெருமானது தலையில் இருந்தவானவன் (இங்குச் சந்திரன்) பெருமையை யாரே அறிந்து சொல்ல வல்லார் என்று பாடுகிறார்.

“திருந்த வானவர்க்கு அரியவன்
செஞ்சடை முடிமேல்

இருந்த வானவன் பெருமையை
யார்கொலோ இசைப்பார்."
(ஆதிபருவம், குருகுலச்சருக்கம், 2-ம் பாடல்)

என்பது அப்பாடற்பகுதி. 'வானவர்க்கு அரியவன்' என்ற தொடரால் அவன் திருமாலுக்கும் நான்முகனுக்கும் கூட அரியவன் என்னும் பொருளைக் குறிப்பாகப் புலப்படுத்தியருளிய வில்லிபுத்தூராரின் செம்மையுள்ளத்தைப் பாராட்டாதிருக்க முடியுமா? "அரியயனுக்கு அரியனை" என்பது சேக்கிழார் வாக்கு.

இதே சருக்கம் 83-வது பாடலில் சந்தனு மன்னன் கங்கா தேவியிடம் தான் பெற்ற மைந்தனாகிய தேவவிரதன் தன் முன்னே வர, அவனைத் தன் மகனென அறியாது இவன் யாரோவென அயிர்த்தபோது, "விடையவன் குமரன் என்று அயிர்க்கும்" என்றும், 108-வது பாடலில் தானும் விடையவன் ஆதலால் என்ற சிலேடை மொழியாலும் சிவபெருமானை நினைவுறுத்திப் பாடியுள்ளவை அறிந்து இன்புறுதற்குரியது.

ஆதி பருவம், சம்பவச் சருக்கம், 48வது பாடலில் பாண்டு மன்னன் வேட்டையாடும்போது அவனது இளைப்பை இமயமலையினின்றும் புறப்பட்டு காற்று நீக்கியது என்ற செய்தியைக் கூற வந்த வல்லிபுத்தூரார் அங்குச் சிவபிரானைத் தானும் நினைந்து நம்மையும் நினைவுகூரச் செய்கிறார். பாண்டு வெண்ணிறமான மேனினையுடையவன். அவன் மீது வேட்டையில் தெறித்த இரத்தத்துளி வெண்மலையாகிய கயிலைய்ல் மலர்ந்த நறுமணங் கமழும் குங்குமப்பூவின் தாது (பொடி) போல இருந்தது என்கிறார். கயிலையைக் கூற வந்தவர் மேருவை வில்லாக வளைத்த சிவபிரானது கயிலை என்று பெருமிதம்படக் கூறுகிறார். இந்த இடத்தில் கவி ஏன் சிவபிரானை, அவனது மலையை வளைத்த வீரத்தைக் குறிப்பிட வேண்டும், என்ற வினா எழின், சிவபிரானை அவ்வப்பொழுது பாடாதிருக்க அவரால் இயலவில்லை என்பதே விடையாகக் கூடும். அந்தப் பாடல் முழுமையையும் இதோ படித்துச் சுவையுங்கள்.

மெய்யில் தெறித்த குருதித்துளி மேடுவில்லி
சையத்து அலாந்த கமழகுங்குமத் தாதுமானக்
கையில் சிலையோடு உலவுங்கழல் காளைகேதம்
பையத் தணித்தான் இமநாக பவனனென்பான்.
(சம்பவச் சருக்கம், 48வது பாடல்)

(மேருவில்லி சையம் - மேருமலையை வில்லாக உடைய சிவபிரானது மலையாகிய கயிலாயம்)

அடுத்து இதே சருக்கத்தில் 112வது பாடலில் வீடுமனை (பீஷ்மா) கங்கையாள்குமரன் என்ற பெயரால் குறிப்பிட முனைந்தவர், மீண்டும் சிவபிரானை நினைவு கூர்கிறார். எப்படி? அப்பெருமானது அடையாள மாலையாகிய கொன்றைப் பூமாலையை குறிப்பிடும் முறையால் அதனைச் சூடும் பெருமானை நினைவு படுத்துகிறார். சிவபிரான் திருமுடியில் தங்கிய கங்கை அப்பெருமானின் திருமுடிமாலையாகிய கொன்றை மாலையிலும் படிகின்றாள் அன்றோ? கொன்றை மலர் பிரணவபுஷ்பம் எனப்படும். சிவபிரானும் பிரணவப் பொருள் ஆவான் அல்லவா? "கந்தவான் கொன்றை தோயும் கங்கையாள் குமரன்" என்பதே இச்செய்தி கூறும் பாடற்பகுதியாகும்.

ஆதி பருவம், வாரணாவதச் சருக்கத்தில் 54வது பாடல், துரோணர் தன் மாணாக்கர் கல்வியை அனைவர்க்குங் காட்டும் பகுதியில், அந்த யுத்தரங்கத்தில் அனைவரும் வந்து சேர்ந்து தத்தம் ஆசனங்களில் அழகாக அமர்ந்து போது அச்சபையானது தேவர்கள் பலர், சித்தர் முதலியோர், சிவபிரான், கருநிறம் வாய்ந்த திருமால், பிரமன், இந்திரன் முதலிய பலர் கலந்த அகன்ற வானுலகத்தை ஒத்திருந்தது என்பதைக் கூறுகின்றது. அப்பாடல் பகுதி பின் வருமாறு.

தெரிவுற விமானமனை தோறும்உறை தேவர்பலர்
சித்தர்முத லோர் பரனொடும்
கரியநெடு மால்பிரமன் இந்திரன் முதல்பலர்
கலந்தஅகல் வான் நிகருமே.

இப்பாடலில் கரிய நெடுமால், பிரமன் என்று பிரித்துக் கூறிவிட்டபடியால் **பரனொடும்** என்ற சொல்தொடர்க்குச் சிவபிரான் என்பதல்லது வேறு எப்பொருள் கொள்ளக் கூடும்? (பரன் - அனைவரினும் மேலானவன், சிவபிரான்). வைணவராகிய உரைகாரருக்கு பரன் என்று சிவபிரானைக் குறிப்பிட்டது பிடிக்கவில்லை போலும். எனவே, அவர் தமது பதிப்பில் **பலரொடும்** என்ற வேறு பாடத்தைப் புகுத்திச் சிவபிரானை இங்கு இருட்டடிப்புச் செய்து விட்டிருக்கிறார். திருமால், பிரமன் என்றிருவரைக் குறிப்பிட்ட கவி, அதுவும் நடுநிலை தவறா உள்ளம் படைத்த வில்லிபுத்தூரார், சிவபிரானைக் கூறாது விடுவரோ? வேறு பாடத்தைப் புகுத்தியும், உரைகாரர், பலரொடும் என்றவிடத்துப் 'பரரொடும்' என்று பிரதிபேதம் எனக்குறிப்பிட்டது அவரது மனச்சாட்சி உறுத்தியதாலோ என்னவோ, நாமறியோம்! நாம் கொண்ட **பரனொடும்** என்ற பாடம் சிவமணி, திரு. ராய. சொ. அவர்களது பதிப்பில் கண்டது என்பதையும் ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறோம்.

வாரணாவதச் சருக்கத்தில் 72-வது பாடலில் கர்ணன் - துரியோதனன் இவரது நட்பைக் கூற வந்த போதும் தனதனும் சிவனும் போல நட்புப் பூண்டு ஒழுகினர்

எனக் கவி காட்டுகிறார். இதே சருக்கம் 91-வது பாடலில் திரௌபதி பாஞ்சால மன்னன் துருபதராசனின் யாகாக்கினியினின்றும் அவன் மகளாய்த் தோன்றிய பொழுது ஆகாயத்தில் எழுந்த ஓர் அசரீரி வாக்கைக் குறிப்பிடும் போது வில்லிபுத்தூரார் "வாமநுதல் கண் மேலின்றுமிவன் பிறந்தாள்" என்று பாடிச் சிவபிரானை நமக்கு நினைவூட்டுகிறார். (வாமன் - சிவபிரான்; நுதல்கண் - நெற்றிக்கண்). வைணவராகிய உடைகாரர் இங்குத் தம்மையும் மறந்து, 'வலக்கண் சூரியனும், இடக்கண் சந்திரனும் நெற்றிக்கண் அக்கினியுமாக இறைவனுக்குக் கண் மூன்றும் குச்சுடராதலால் நெருப்பை வாம நுதற்கண்' என்று சைவ சம்பிரதாயத்தை ஒட்டி விளக்கஞ் செய்துள்ளார். எல்லார்க்குத் தலைவன் என்ற பொருளைத்தரும் இறைவன் என்ற சொல்லை உரைகாரர் இங்குச் சிவபிரானுக்கு ஆக்கியதும் குறிப்பிடத்தக்கது.

துரியோதனாதியர் பாண்டவர் மேல் பொறாமை கொண்டு அவர்களை வஞ்சனையால் அழிக்கத் தீட்டிய திட்டம் வாரணாவதத்து அரக்குமாளிகையாம். பாண்டவரை அதில் குடிபுகச் செய்து தக்க சமய்த்தில் அதனைத் தீ வைத்து அழித்து விட்டால் அதனுள் வைகும் பாண்டவரும் அழிந்து விடுவர் என்பதே துரியோதனாதியரது தீய எண்ணம். அதன்படி பாண்டவர்கள் வாரணாவதத்துக்கு அனுப்பப்படுகிறார்கள். அங்குச் செல்லும் பாண்டவர்கள் சிவபக்தர்களாகையால் வாரணாவதத்துக் கோயில் கொண்ட விசுவேசப் பெருமானைத் தரிசிக்கின்றனர் என்பதைக் கவி மறக்காது கூறுகின்றார். (வாரணாவதம் - காசி) இதோ அப்பாடல்,

ஆர மார்புடை ஐவருங் குந்தியும்
பூர ஞான புரோசன நாமனும்
சேர வெண்பிறைச் செஞ்சடை வானவன்
வார ணாவதம் சென்றுவணங் கினார்.

(வாரணாவதச் சருக்கம், 115ம் பாடல்)

பஞ்சபாண்டவர்களும், குந்தியும் உடன் வந்த புரோசனன் என்னும் அமைச்சனும் ஒன்றாக வெள்ளை நிறம் வாய்ந்த பிறைச்சந்தரனைச் சூடிய சிவந்த சடையையுடைய சிவபிரானை வாரணாவதம் சென்று வணங்கினார்கள் என்பது மேற்படி பாடலில் போந்த செய்தியாகும். சுருக்கமாகவே பாரதக் கதையை அமைத்துக் கொண்டு வரும் கவி, இங்கு ஐவரின் சிவ வணக்கத்தைப் பாடாமலேயே கதையைத் தொடர்பு படுத்திச் செல்லக் கூடும் என்றாலும், வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் சிவபிரானைத் தாமும் நினைந்து வாசகர்களுக்கும் நினைப்பூட்டும் தமது மரபின்படி இங்குச் சிவனை வணங்கிய செய்தியைப் பாடியுள்ளார் என்பதே நமது கருத்தாகும். மற்றும் சிவபிரானைக் குறிப்பிட வேறு எத்தனையோ சொற்றொடர்கள் இருப்பினும் இங்கு, '**வெண்பிறைச் செஞ்சடை வானவன்**' என்று

குறிப்பிட்டதில் ஒரு நயமுங் காண்கின்றோம். அஃது தனது மாமனாகிய தக்ஷனால் சபிக்கப்பட்டு, எங்கும் பகல் கிடைக்காது, சிவபிரானைச் சரணடைந்து அவரால் சந்திரன் காப்பாற்றப்பட்டான் என்ற கந்தபுராணம் தக்ஷகாண்டச் செய்தியே போல், தம் தந்தையுடன் உடன் பிறந்த திருதராஷ்டிர குமாரர்களால் ஆபத்தடைந்த பாண்டவர்களும் சிவபிரானருளால் தான் காப்பாற்றப்பட வேண்டியவர்கள் என்பதையே கவி இங்குக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றாரோ என்பதேயாகும். வாரணாவதத்தில் தங்களுக்கென அமைக்கப்பட்ட அந்த அரக்கு மாளிகையில் குடிபுக்க செய்தியைச் சொன்ன அடுத்த பாடலுலும், கவி "அங்கு அவன்றன் அருள் பெற்று" என்று சிவபிரானது அருளைப் பெற்று மாளிகையில் குடியேறினார்கள் என்று கூறியதும் மேற்கண்ட கருத்துக்கு வலியூட்டுகின்றது. காசி விசுவநாதன் தன் தலத்துக்கு வந்த தன் பக்தர்களையும் அழிய விடுவானோ? அவர்கள் தப்பி உய்ந்ததையும் பார்ப்போம்.

துரியோதனாதியரது வஞ்சகத்தைச் சிற்பி ஒருவன் மூலம் அறிகிறான் வீமன். பாண்டவரது நலத்தைக் கோருபவனான விதுரன் ஏவலால் இச்சிற்பியும் அந்த அரக்கு மாளிகையமைக்கும் சிற்பிகளில் ஒருவனாகத் தொழில் பட்டு, அந்த மாளிகையின் ஒரு தூணின் கீழ் அந்தரங்கமான ஒரு வழியை அமைத்திருந்தான். இந்த ரகசியத்தை அறிந்து கொண்ட வீமன், ஓர் இரவு புரோசனன் என்னும் அவ்வஞ்சனையமைச்சனை அழைத்து, நெடுநேரம் இரவில் அரசியல் ஆராய்வான் போல் பேசி, அவனை அன்றிரவு அங்கேயே படுக்கச் செய்கின்றான். புரோசனன் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் போது, மாளிகைக்கு தீ வைத்து விட்டுத் தன் உடன் பிறந்தோர்களையும் தாயையும் அழைத்துக் கொண்டு தான் முன்னமே சிற்பியின் மூலம் அறிந்து வைத்திருந்த அந்தரங்க வழியாகத் தப்பி ஒரு காட்டினையடைந்து விட்டான். துர்மந்திரியான புரோசனனுடனும், துரியோதனாதியரால் பாண்டவர்க்கு விஷங்கலந்த தேனைக்கொடுக்க அனுப்பப்பட்ட ஐந்து வேடர்களும் அவர்கள் தாயும் அன்று இரவு அங்கே தங்க, அவர்களோடும் சேர்ந்து அரக்கு மாளிகை தீப்பற்றி எரிந்தொழிந்தது. தெய்வ சங்கல்பத்தின் முன் மனித சங்கல்பம் மடிந்து போமன்றோ?

இங்ஙனம் அரக்கு மாளிகையைக் கொளுத்தி விட்டுத் தாயுடனும் உடன்பிறந்தோருடனும் அந்தரங்க வழியாகத் தப்பிச் சென்று அகன்ற காட்டினைச் சென்று சேர்ந்த வீமன், மூன்று கண்படைத்த அற்புதனான சிவபிரான் கோபித்து அழித்த முப்புரத்தினின்றும் எரியாது தப்பிய மூன்று பேரை ஒத்துக் காணப்பட்டான் என்று கவி இச்சருக்கத்து 131ம் பாடலில் கூறுகின்றார். **"முக்கண் அற்புதன் முனிந்த ஊர் மூவரோடு ஒப்பான்"** என்பது இச்செய்தி கூறும் பாடற் பகுதி.

இங்கு வில்லிபுத்தூரார் சிவபிரானை முக்கண் அற்புதன் என்று பாடிய சிறப்பை எப்படிப் புகழ்வோம்? 'முக்கண் அற்புதல்' என்ற சொற்றொடருக்கு 'மூன்று திருக்கண்கள் உடைய விசித்திர சக்தியுடையவனான சிவபிரான்' என்று உரைகாரர் பொருள் எழுதியதையும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். பாரதம் பாடியவரும் ஒரு வைணவர், உரை யெழுதியவரும் ஒரு வைணவர் என்பதை இங்கு நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இனிச் சிவபிரான் **முக்கண் அற்புதன்** என்று போற்றப்பட்டதன நயத்தைச் சிறிது பார்ப்போம். முப்புரமெரித்த விரிசடைப் பெருமானின் இவ்வீரச் செயலைப் பின்னர் விரிவாக எழுத இருப்பதால் இங்குத் தேவைக்கேற்பச் சுருக்கமாகவே கூறுவோம். திரிபுர சங்காரத்தினைச் சிவபிரானேயன்றி பிரமம் விஷ்ணுவாதி தேவர்கள் எவராலும் செய்ய இயலாது என்பதையறிந்த தேவர்களனைவரும் அப்பெருமானிடம் சென்று, "நாங்களெல்லோரும் பசுக்கள், தேவரீரே பசுபதி, திரிபுரத்தசுரர்களையழித்து எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று பிரார்த்திக்க பெருமான் அதற்கு உடன்பட்டு ஒரு விசித்திரமான யுத்தஸன்னாகத்துடன் போருக்கு எழுந்தருளினார். இதை ஸ்காந்தமஹாபுராணம், சங்கர ஸம்ஹிதை, சிவரஹஸ்ய கண்டம், தக்ஷகாணடத்தின் மங்கள சுலோகம் பின் வருமாறு கூறுகிறது.

மௌர்வீ மூர்த்நிரதச்சராசன சிரஸ்ஸஞ்சாரி சக்ரத்வயம்
சக்ராந்தர்நிஹிதச் சரஸ்ததுதரே ஸூதஸ்ஹ்ததாஸ்யேஹயா:
தேஷாமேவசிர: பதேஷுவஸதிஸ்ஸவ்ஸ்யேதி யஸ்யச்ருதம்
தேவச்சித்ர பரிச்சதஸ்ஸுபகவான் குர்யாத்ஸதாமங்களம்.

இந்த சுலோகத்தின் பொருள்: - நாண் கயிற்றின் தலைமீது இருக்கும் ரதத்தையும், வில்லினுடைய தலைமீது ஸஞ்சரிக்கின்ற இரண்டு சக்கரங்களையும், சக்கரத்துக்கு உள்ளேயிருக்கின்ற பாணத்தையும், அந்த பாணத்தின் வயிற்றிலிருக்கும் ஸாரதியையும், அந்த ஸாரதியின் வாயிலிருக்கும் குதிரைகளையும், அக்குதிரைகளின் தலைகளில் குடியிருத்தலையும் ஆகிய இப்படிப்பட்ட விநோதமான யுத்தஸன்னாகத்தைக் கொண்ட ஸ்ரீ பரமேச்வரன் எப்பொழுதும் மங்களத்தைச் செய்யட்டும்.

இதன் கருத்து: - சிவபெருமான் திரிபுரஸ்மஹாரம் செய்யும் போது ஆதிசேஷனை நாண்கயிறாகவும், அந்த ஆதிசேஷன் தலைமீதிருக்கும் பூமியை ரதமாகவும், மஹாமேரு மலையை வில்லாகவும், அந்த மஹாமேரு மலையின் மீது ஸஞ்சரிக்கும் ஸூரிய சந்திரர்களைச் சக்கரங்களாகவும், அந்த ஸூரிய மண்டலத்தின் நடுவில் விளங்கும் திருமாலைப் பாணமாகவும், அவர் வயிற்றிலிருந்து உண்டான பிரமம் தேவனைத் தேரோட்டியாகவும், அந்த

பிரம்மதேவனுடைய நாக்கில் விளங்கும் வேதங்களைக் குதிரைகளாகவும் வைத்துக் கொண்டு அந்த வேதங்களின் உச்சியாகிய உபநிடதங்களைத் தன் வாசஸ்தலமாகவும் கொண்ட பரமசிவனார் முப்புரங்களை எரித்தார். அத்தகைய விநோதமான யுத்த ஸன்னாகத்தைக் கொண்ட பரமசிவன் நமக்கு எப்பொழுதும் நன்மையையே செய்யட்டும் என்பதாம்.

இத்தகையதான துணைக்கருவிகளுடன் போர் மேல் சென்றும் இவையொன்றும் பயன்படாமல் தம் சிரிப்பினாலேயே முப்புரத்தை எரித்தருளினார். இதனைப் புஷ்பதந்தர் என்பவர் தமது சிவமஹிம்ன ஸ்தோத்ரத்தில் கூறும்போது "ஈசனே! உமக்கு அற்பமான புல்லைப் போன்ற முப்புரங்களை எரிக்க நீர் விரும்பியபோது பூமி தேராகவும் பிரம்மதேவன் ஸாரதியாகவும், மேருமலை வில்லாகவும், மற்றும் சந்திர சூரியர்கள் இரண்டு தேர்ச்சக்கரங்களாகவும், சக்ரபாணியான திருமால் அம்பாகவும் இருந்தனர். இத்தகைய ஆடம்பரங்கள் உமக்கு எதற்காக? (முப்புரங்களை இறைவன் புன்னகையால் எரித்தான் என்பது வரலாறு) ஒரு பிரபுவானவர் ஒரு பொழுதும் தன் கீழ்ள்ளவர்களை எதிர்பார்த்து இருப்பதில்லை. (அவர்களை எதிர்பார்ப்பது போல காட்டி) விளையாடுவார் என்று கூறிகிறார். மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில்,

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற
(திருவாசகம் - திருவுந்தியார்-2)

என்று பாடியுள்ளார். திருமாலாகிய ஒரம்பும் அவர்க்குப் பயன்படாது ஒழிந்தது. என்னை? முப்புரங்களும் எரியுறும்படிச் சிரித்தே செய்தனராகலின் என்க என்பது மேற்படி பாடலின் கருத்தாகும். திரிபுரஸம்ஹாரத்தைப் பற்றிப் பாடாத கவிகள் இல்லை என்றே கூறலாம். வேதத்திலும் இவ்வரலாறு கூறப்பட்டுள்ளதே இதன் மகத்துவத்துக்குச் சான்றாகும். எனவே திரிபுர ஸம்ஹாரத்தின் இத்தனை நுட்பங்களையும் மகத்துவத்தையும் உள்லடக்கி ஒரே சொல்லால் அற்புதன் என்று ஏத்திய வில்லிபுத்தூராழ்வாரின் கவித்திறத்தைப் பாராட்டுவதா? அன்றி அவரது சிவபக்தியைப் போற்றுவதா? தாம்பாடிய பாரதத்தில் மேலும் பல இடங்களிலும் சிவபிரான் திரிபுரம் எரித்த திறனைத் திறம்படப் போற்றியுள்ளார் என்று மட்டும் கூறி விரிவஞ்சி இதனை இத்துடன் நிறுத்தி மேற்கொண்டு ஆராய்ச்சியில் புகுகின்றோம்.

அடுத்து வேத்திரகீயச் சருக்கம் என்ற பகுதியைப் பார்ப்போம். அரக்கு மாளிகையினின்றும் தப்பிய பாண்டவர் ஐவரும் தாயுடன் ஒரு வனத்தையடைகின்றனர். அங்கு இடிம்பன் என்னுமரக்கனை வீமன் கொன்று, அதன்

பின்னர் இடிம்பனின் தங்கையான இட்ம்பி என்னுமரக்கியை மணந்து கொண்டு அவள் மூலம் கடோத்கஜன் என்னும் குமாரனைப் பெற்றான் என்று கதை தொடருகிறது. பின்னர் பாண்டவரும் தாயும் பிராமண வேடம் பூண்டு வேத்திரகீயம் என்ற ஊரை அடைகிறார்கள். ஓரந்தணன் வீட்டில் தங்கியிருக்கிறார்கள். அவ்வூரில் விருந்துண்டு காலங்கழிக்கும் நாட்களில் ஒரு நாள் அவர்கள் தங்கியிருந்த வீட்டு அந்தணன் மனைவி மூலம் பகாசுரன் என்பவனைப் பற்றியும் அவனுக்கு அன்று அவர்கள் வீட்டில் ஒருவர் உணவுடன் சென்று பலியாக வேண்டும் என்பதையும் அறிந்து "வீமனைப் பலியாகக் கொடுக்க" என்று குந்தி கூறியவளவில், அந்தணனும் அவன் மனைவியும் பகன் என்னுமசுரனுக்கு அனுப்ப உணவு தயாரித்தலை மேற் கொண்டரன். இச்செய்தியைக் கூறும் வில்லியாரின் பாடலைக் காண்மின்.

அவனையிடுபலி அருளுகெனமொழி
அளவில்மறவியும் உளைவுறச்
சிவனைவழிபடும் மகவையருளிய
செனகசெனனியர் நிகரெனத்
தவனில்முதிர்தரு முனியும்வழுவறு
தனதிலறனுடை வனிதையும்
துவனியறமன மகிழ்வொடினிதறு
சுவைகொளமுதடு தொழிலராய்.

(வேத்திரிகீயச்சருக்கம், 47ம் பாடல்)

"அந்த வீமனைப் பலியாகக் கொடுக்க" எனக் குந்தி கூறியவளவில், இயமனும் வருந்துபடிச் சிவபெருமானை வழிபட்ட மார்க்கண்டனைப் பெற்ற தாய் தந்தையர்க்கு ஒப்பெனத் தவத்தினால் முதிர்ச்சியடைந்த முனிவனாகிய அவ்வீட்டு அந்தணனும் பழுதில்லாதவளாகிய் அவன் மனைவியும் தமது அழுகையொலி நீங்க, மனமகிழ்ச்சியுடன் அறுசுவை உணவு சமைக்குந் தொழிலை மேற்கொண்டார்கள்" என்பது மேற்காட்டிய பாடலின் திரண்ட பொருளாகும். இறைவனுடைய வீரச்செயல்களுள் திரிபுரசங்காரத்தை முன் கூறிய கவி, இப்பாடலில் அப்பெருமானின் காலஸம்ஹார வீரச்செயலை எத்துணை நயமபடக் கூறியுள்ளார் என்பதைச் சிறிதே பார்ப்போம்.

மிருகண்டு முனிவனது தவப்பேறாய்ப் பிறந்த மார்க்கண்டேயன் இடைவிடாது சிவபூசனை செய்து கொண்டு வளர்ந்து வருகின்றான். பதினாறு பிராயம் முற்றுமளவிலே தாய்தந்தையர் 'இவனை நாம் இழக்க நேருமே' என்று மிகக் கலங்க, கலக்கத்தின் காரணத்தையறிந்த மார்க்கண்டேயர் பெருமானை மேலும் இடைவிடாது பூசித்து வந்தார். சிவபூசையின் நடுவில் இயமன் வந்து காலபாசத்தாற் கட்டி இழுக்கும் வேளையில் அப்பெருமான் சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு இயமனைக் காலால் உதைத்து மார்க்கண்டேயருக்கு என்றும் பதினாறு

ஆகத் தீர்க்காயுள் அருளி அவரைச் சிரஞ்சீவியாக்கினார் என்பது கந்தபுராணம், அசுரகாண்டம், மார்க்கண்டேயப் படலத்தில் குறித்த வரலாறு. (விரிவு ஆண்டுக் கண்டு கொள்க) இந்த வரலாற்றினையே சூத்திரம் போன்ற சுருங்கிய சொற்களால், "மறலியும் உளைவுறச் சிவனை வழிபடும் மகவு" என வில்லிபுத்தூரார் பாடியுள்ளது சிவநேயச் செல்வர்களது உள்ளத்தை மலர்விக்கும் என்பதில் ஐயமுண்டோ? கந்தபுராணம் போன்ற சிவபுராணங்களில் வில்லிபுத்தூரார் எத்துணைத் தோய்வு உடையவராயிருந்தார் என்பதையும் இது எடுத்துக் காட்டும்.

மார்க்கண்டேயரின் தாய் தந்தையர்க்கு, இவ்வந்தணத் தம்பதியரை உவமித்ததன் உட்கருத்து யாதெனின் அவர்கள் மார்க்கண்டேயர் மூலம் சிவனருளால் இயமனை உதைபட்டு வீழும்படிச் செய்து போல இவ்வந்தணத் தம்பதியரும் சிவனருள் பெற்ற வீமனைக் கொண்டு பகன் என்னுமரக்கனை அழிக்கப் போகின்றனர் என்பதாம்.

வீமன் பகாசுரனைக் கொன்று வெற்றியுடன் வீடு திரும்புகிறான். திரும்பி, தான் தங்கியிருந்த வீட்டு அந்தணர் தம்பதியரை வணங்குகின்றான். இச்செய்தியைக் கூறுமிடத்து வில்லிபுத்தூரார், அவ்வந்தணத் தம்பதியரை "ஈசனோடு உமை எனத் தவம் புரியும் இருவர்" என்று கூறுயதன் கருத்தை உரைகாரர், 'இல்லறத்தில் நின்றபடியே நல்லொழுக்கத்தை மிகச்சிறப்பாக நடத்துதற்கு ஈசனும் உமையும் உவமை கூறப்பட்டனர்' என்று விளக்கியுள்ளதும் பொருந்துவதே. ஈசனும் உமையும் ஆதி தம்பதிகள், அவர்களே ஆதர்ச தம்பதிகளுமாவர் அல்லவா?

ஆதிபருவத்து ஐந்தாவதாக வருவது திரௌபதி மாலையிட்ட சருக்கம் என்பதாம். ஐந்து பாண்டவர்கள் ஒரே பெண்ணை மணஞ்செய்து கொண்ட வரலாறு ஐந்தாவதாக வந்ததும் ஒரு பொருத்தம் போலும். பாஞ்சால மன்னன் துருபதன் தன் மகட்குச் சுயம்வரம் அமைக்கின்றான் என்ற செய்தியைப் பாண்டவர் அறிந்து வேத்திரகீய நகரினின்றும் பாஞ்சாலம் நோக்கிப் புறப்பட்டனர். பாஞ்சால மன்னனின் சுயம்வர மண்டபத்தையடைந்து அங்கு இருந்தனர்.

துருபத புத்திரனான திருஷ்டத்யும்னன் என்பான் சுயம்வர மண்டபத்துக் கூடியிருந்த அரசர்களை நோக்கி, "சக்கரவடிவாய் வேகமாகச் சுழலும் இயந்திரத்தின் நடுவேயுள்ள இலக்கை இதோ இந்த வில்லால் எய்பவருக்கே திரௌபதி உரியவள் ஆவாள்" என்று கூறினான். பல அரசர்கள் முயன்று தோல்வியுற்றதைப் பாரதம் விரித்துக் கூறும். அவை நம் ஆராய்ச்சிக்கு உரியனவன்றாகையால் அவற்றை விரித்தோமல்லோம். கடைசியாகத் துரியோதனனின் நண்பனான கன்னன் (கர்ணன்) வில்லை வளைத்தும் இலக்கினை எய்யமாட்டாது தோல்வியுற்றதைக் கவி, **"அரன் இருந்த கயிலையென்னும் மலை வருத்தம் அற எடுத்த நிருதன் என்ன"** என்று

கன்னனைக் கயிலையெடுத்த இராவணனுக்கு ஒப்பாகக் கூறுகின்றார். (திரௌபதி மாலையிட்ட சருக்கம், 53ம் பாடல்). வில்வளைத்த கன்னனின் தோல்வியை வேறு வகையாற் குறிப்பிடலாமெனினும், எவ்வாற்றானும் சிவபிரானை நினைந்து பாட வேண்டும் என்ற கருத்தினர் ஆகலின் இங்கு **"அரன் இருந்த கயிலைமலை"** எனப் பெருமானையும் அவனது இருப்பிடத்தையும் சுட்டிப் பாடினர் என்று கொள்க. இராவணன் அன்று அடைந்தது தோல்வியே. அதுபோலக் கன்னனும் இன்குத் தோல்வியே அடைந்தான் என்பதையும் இவ்வுவமை எடுத்துக் காட்டும்.

கன்னன் தோல்வியுற்று வீழ்ந்ததைக் கண்ட, பிராமண வேடத்திலிருந்த அருச்சுனன், "அரசரேயன்றி அந்தணரும் இவ்விலக்கை எய்தால், திரௌபதி மாலை சூட்டுவளோ" என்று வினவ, திருஷ்டத்துய்மனும் "அது பெருமையேயன்றித் தாழ்வாகாது" என மறுமொழி இயம்ப, அருச்சுனன் வில்லையெடுத்தான் என்பதை இக்கவிஞர் பெருமான் "ஈசன் மேருகிரி எடுத்ததென விரைவில் கொண்டான்" (திரௌபதி மாலையிட்ட சருக்கம், 55ம் பாடல்) என்று பாடியதன் பெருமை அறிந்து இன்புறற்குரியது. எவராலும் எய்யமுடியாத இலக்கை எய்யமுற்பட்டு வில்லை எடுத்த விசயன் செய்கைக்கு, எவராலும் வெல்ல முடியாது முப்புரத்தையெரித்த சிவபிரான் மேரு மலையை வில்லாகத் தூக்கியதை உவமித்ததின் நுட்பத்தைப் பாராட்டாதிருக்க இயலவில்லை. இறைவனின் திருபுர ஸம்ஹார வீரம் இக்கவிஞர் மணியின் உள்ளத்தை எவ்வளவு கவர்ந்து விட்டது என்பதற்கு இப்பாடலும் ஒரு சான்றாகும். மேலும், அர்ச்சுனன் சுயம்வர மண்டபத்து வில்லைத் தூக்கியதற்கு, திருமால் சாரங்கம் என்ற வில்லையெடுத்தது போல என்றோ, இராமன் சீதை சுயம்வரத்தில் பணயமாக வைக்கப்பட்ட வில்லைத் தூக்கி வளைத்தது போன்று என்றோ உவமை கூறாது **ஈசன் மேருகிரி எடுத்ததென** என்று உவமித்ததன் மூலம், இதுவே அனைத்திலும் அரிய பெரிய செய்கை என்பதைத்தாம் நன்கு அறிந்திருந்தார் என்பதை வில்லிபுத்தூரார் இங்குத் தெளிவுபடுத்தியுள்ளார் என்று கொள்க.

அடுத்து, அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கத்தில் வில்லிபுத்தூராழ்வார் சிவபெருமானைப் போற்றுவதில் தமக்குள்ள அடங்காத பேரார்வத்தை எங்ஙனம் புலப்படுத்தியுள்ளார் என்பதையும் சிறிது காண்போம். பாண்டவர் ஐவரும் திரௌபதியை மணந்துகொண்டபோது நாரதமுனிவர் வந்து, "நீவிர் ஒவ்வொரு வருடத்துக்கு ஒருவராக திரௌப்தியுடன் கூடி வாழுங்கள். அவ்வாறு வாழும் நாட்களில் மற்றைய நால்வரும் அவனைக் காணுதல் கூடாது. அங்ஙனம் காண நேரிட்டால், அந்த தோஷத்திற்குப் பரிகாரமாக, மாறுவேடத்துடன் ஒரு வருட காலம் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டும்" என அவர்க்கு ஒரு நியமத்தினை வகுத்துச் சென்றார். இந்த முறைப்படி அவர்கள் வாழ்ந்து வருகையில் தருமபுத்திரனுடன் பாஞ்சாலி வாழும் நாட்களில் ஓர் நாள் அருச்சுனன் திரௌபதியைத் தருமனுடன்

காண நேரிட்டு விட்டது. நாரதர் வகுத்த நியம்படி அத்தோஷ பரிகாரமாகப் புண்ணிய தீர்த்த யாத்திரை செய்யப்புறப்பட்டு, முதலில் அவன் கங்கைநதியில் நீராடிய செய்தியைச் சொல்ல வந்த புலவர், **புரவிசயன் சூடம்தரு பாகீரதி** (தீர்த்த யாத்திரைச் சருக்கம், 7ம் பாடல்) எனக் கங்கையைக் குறிப்பிடும் முகத்தால் மீண்டும் இறைவனது முப்புரம் வென்றருளிய அரிய வீரத்தையே நினைவு கூர்கின்றார். 'முப்புரங்களையும் வென்றருளியவராகிய சிவபிரானது சடைமுடியினால் தரப்பட்ட கங்கா நதி' என்பது இதன் பொருளாகும்.

பின்னர் பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய அருச்சுனன் காஞ்சீபுரம் வந்து சேர்ந்தான் என்ற செய்தியைக் கூறும் வில்லிபுத்தூராழ்வாரின் அருமையான பாடலை ஒரு முறையல்ல, பலமுறை படித்து மகிழுங்கள்.

இச்சைப்படி தன்பேரற மெண்ணான்கும் வளர்க்கும்
பச்சைக்கொடி விடையோனொரு பாகந்திறை கொண்டாள்
செச்சைத்தொடை யிளையோனுகர் தீம்பால்மணம் நாறும்
கச்சைப்பொரு முலையாளுறை கச்சிப்பதி கண்டான்.
(அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம், 13ம் பாடல்)

இப்பாடலைப் பலமுறைகள் திரும்பத் திரும்பப் படித்தும் எமது ஆசை அடங்கவில்லை. பாடலின் சொற்சுவையும் பொருட்சுவையும் நாவையும் மனதையும் விட்டு நீங்கவில்லை. 'பச்சைக்கொடி விடையோனொரு **பாகந் திறைகொண்டாள்'** என்னும் இரண்டாமடி சைவத் தெய்வத் திருமுறையாசிரியர்களின் வாக்கினை நினைவூட்டுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் திருவையாற்றிலே திருக்கயிலாயக் காட்சியைக் கண்டார். அப்போது அவர் சிவபெருமானை உமையம்மையாரோடு ஒரு சேர வீற்றிருந்தபடி தரிசனம் செய்தார் என்பதைத் தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமான், தம் பெரியபுராணத்தில்,

வெள்ளி வெற்பின் மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனஇடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார்.
(திருநாவுக்கரசு நாயனார் புராணம், 379ம் பாடல்)

என்ற தெய்வம் மணக்கும் பாடலினால் காட்டுகின்றார். இத்திருப்பாடலில் உள்ள **மரகதக்கொடி** என்பது **பச்சைக்கொடி** என வில்லிபுத்தூராரால் பாடப்பட்டுள்ளது அறிந்து இன்புறுதற்குரியது.

இனி, வில்லிபுத்தூரார் பாடலின் பொருளைப் பார்ப்போம். தனது விருப்பத்தின்படி சிறந்த முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கின்ற பச்சைக்கொடி

போன்றவளும் இடபவாகனனாகிய சிவபிரானது திருமேனியில் ஒரு பாகத்தைத் தன் தங்குமிடமாகப் பெற்றவளும், வெட்சிப் பூமாலையையுடைய இளையோனாகிய முருககடவுள் அருந்திய இனிய பாலின் மணம் கமழ்கின்ற கச்சினை மோதுகின்ற திருமுலைகளையுடையவளுமாகிய காமாக்ஷியம்மையார் கோயில் கொண்ட மாநகரைப் பார்த்தான் (அடைந்தான் என்றபடி).

இப்பாடலின் பொருளைக் காணும்போது, அருச்சுனன் காஞ்சியம்பதியை அடைந்தான் என்று கூற முற்பட்ட வில்லிபுத்தூராருக்கு, 'காஞ்சி, என்றதுமே விடையோனும் அவன் ஒரு பாகத்து உறையும் உமாதேவியாரும், குமரனுமே முதன் முதலில் நினைவுக்கு வந்தனர் என்பதையும், இதனால் அவர் உள்ளத்தில் எப்பொழுதும் சிவனுணர்வே முற்பட்டு உள்ளது என்பதையும் ஊகித்துணரலாம். காஞ்சி மாநகரில் விடையோன் ஸ்ரீ ஏகாம்பரநாதர் எனவும் உமையம்மையார் காமாக்ஷி எனவும் துதிக்கப்படுவர். இளையோனாகிய முருகன் குமரகோட்டம் என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்றான். காஞ்சீபுரத்தில் காமாக்ஷியம்மைக்கு உள்ள தலைமை தோன்ற 'அவளுறையுங்கச்சிப்பதி" என்றுங் கூறினார் என்ற உரை ஆசிரியரின் விளக்கமும் போற்றற்குரியதே. இந்த ஒரு பாடலில், உமையம்மையார் காஞ்சியில் ஈசனைப் பூசித்தது, முப்பத்திரண்டு அறங்கள் வளர்த்தது, ஈசனின் இடது பாகத்தைப் பெற்றது, சரவணப் பொய்கையில் தோன்றிய இளங்குழந்தை வடிவாகிய குமரக்கடவுளுக்குப் பால் அருத்தியது முதலிய பல வரலாறுகளைத் தொகுத்துரைத்த நூலாசிரியரின் புலமைத்திறத்தையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

பொதுவாக வைணவர்களுக்குக் காஞ்சீபுரம் என்றால் வரதராசப் பெருமாள் கோயில் தான் நினைவுக்கு வரும். சில வைணவர்கள், 'காஞ்சிக்குப் போய் வந்தேன்' எனச் சொல்ல நேரும் போது, காஞ்சி என்று சொல்லாது, 'பெருமாள் கோவிலுக்குச்' சென்று வந்தேன் என்று தான் கூறுவார்கள். அம்மாதிரி வைணவர்கள் கூறியதைப் பலமுறை யாமுங் கேட்டிருக்கின்றோம். இத்தகைய வைணவ மரபிலே வந்த வில்லிபுத்தூராழ்வார் காஞ்சீபுரம் என்றதும் வரதராசப் பெருமாளை முதன் முதலில் நினைவுபடுத்தாது, விடையோனையும் அவன் பாகம் திறைகொண்ட உமையம்மையாரையும், இளையோனாகிய முருகப்பெருமானையுமே நினைவு படுத்தியது அவரது மெய்யுணர்வு பெற்ற தன்மைக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கின்றது.

அடுத்த பாடலில் (பாடல் 14) வரதராசப் பெருமாள் திருக்கோயிலைத் தரிசித்து பின் ஒற்றை மாமர நீழலின் கீழ் உறைகின்ற எட்டுத் தோள்களையுடைய சிவபெருமான் காட்சியளிக்கின்ற திருமேனிக்கோலத்தையும் உள்ளன்போடு வணங்கி அந்த நகரத்தில் உள்ள நற்பயன்களையளிக்கும் தன்மை வாய்ந்த ஏழு

நதிகளிலும் நீராடினான் என்று கவி கூறுகிறார். இங்குச் சிவபிரானை எண்புயனார் உறை மெய்க்கோலம் என வில்லிபுத்தூரார் பாடியது திருநாவுக்கரசர் பெருமான் தமது திருவங்க மாலையில் எண்டோள் வீசி நின்றாடும் பிரான் எனப் போற்றியுள்ளதை நினைவு படுத்துகின்றது அல்லவா?

அடுத்த பாடலில், காஞ்சிக் கோயில்களை வணங்கிய பிறகு, அருச்சுனன் திருவண்ணாமலையை வணங்கின செய்தியைக் கூறும் பாடலைக் கீழே கொடுத்துள்ளோம்.

பெற்றாள்சக தண்டங்கள் அனைத்தும் மவைபெற்றும்
முற்றாமுகிழ் முலையாளொடு முக்கண்ணர் விரும்பும்
பற்றாமென மிக்கோரிகழ் பற்றொன்றினு முண்மை
கற்றார்தொழு மருணாசலம் அன்போடு கைதொழுதான்.
(அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம், 15ம் பாடல்)

அனைத்து உலகங்களையும் பெற்றெடுத்தும் தான் முதிர்ச்சி அடையாத முகிழ்த்த உண்ணாமுலையம்மையோடு முக்கண்ணரான அருணாசலேச்வரர் விரும்பி உறைகின்ற திருத்தலமாகும் இது என்ற காரணத்தால், மேலோர் இகழ்கின்ற இவ்வுலகப்பற்று தம்மைப் பொருந்திய காலத்தும், உண்மைப் பொருள் கற்றறிந்தவர்கள் தொழுகின்ற திருவண்ணாமலையை அன்புடன் அருச்சுனன் கும்பிட்டான் என்பது மேற்காட்டிய பாடலின் திரண்ட பொருளாகும்.

“சிவபிரான் தன்னுடைய பராசக்தியான அம்பிகையினது உதவியைக் கொண்டே பிரபஞ்சங்களைப் படைத்தருளுதலாலும், இச்சாமாத்திரத்தால் அவையனைத்தும் உண்டாதல் பற்றி ‘பெற்றாள்சகதண்டங்கள் அனைத்தும், அவை பெற்றும் முற்றாமுகிழ் முலையாள்’ என்றார்” என்பது உரைகாரரின் விளக்கம். இப்பகுதி “.....உலகுயிரெல்லாம் ஈன்றும் பவன் பிரமசாரியாகும், பான்மொழி (அம்பிகை) கன்னியாகும்...” என்ற சிவஞானசித்தியார் கருத்தை ஒத்து இருத்தல் காண்க.

இப்பாடலின் பிற்பகுதிக்கு உரையாசிரியர் கூறும் விளக்கமும் சீரியதேயாம். அதையும் இங்குத் தருவோம். “உலகப் பொருட்பற்று முத்திபெறுதற்குத் தடையாதல் பற்றி ஒழிக்கத் தக்கதாலால் ‘மிக்கோர் இகழ்பற்று’ எனப்பட்டது. பற்று ஒன்றினும் தொழுதலாவது பிரபஞ்ச சம்பந்தமான உண்ணல், உடுத்தல், உறங்கல் முதலிய தொழில்களைச் செய்யும் பொழுதும் இடைவிடாது சிந்தித்தல். இது தன்னை நினைத்த மாத்திரத்தில் முத்தியளிக்கும் தலமாதலால், அவ்வுண்மை உணர்ந்தோரால் பற்றற்றே தொழவேண்டுமென்ற நியதியில்லாமல், பற்று அறாத பொழுதும் தொழவேண்டு மென்க:. உரைகாரரின் இந்த விளக்கம், நூலாசிரியர்

அருணாசல க்ஷேத்திரத்தின் பெருமையைத் தாம் எவ்வாறு உணர்ந்து பிறர்க்கும் உணர்த்துகிறார் என்பதைக் காட்டுகிறது. திருமால் தலத்தைத் தொழதான் என்று சொல்லும்போது ஆசிரியர் காட்டும் ஆர்வத்தைவிடச் சிவத்தலத்தைக் கூறும் போது அவரது பேரார்வம் மிக்குத்தோன்றுதலையும் கண்டு கொள்க. அடுத்து வரும் பாடல்களிலும் இங்ஙனமே வருதலையும் காண்க.

இதே சருக்கம் 16வது பாடலில் அருச்சுனன் பெண்ணையாற்றில் நீராடி திருக்கோவலூர் உலகளந்த பெருமாளையும், திருக்கோவலூர் வீரட்டானேச்வரைரையும் தரிசித்தான் என்று கூறுகிறார். இந்தச் செய்தியைக் கூறும் அப்பாடற் பகுதியைக் கீழே காண்க.

கருகுங்கரு முகில்மேனியர் கவிஞானியர் கண்ணில்
பருகுஞ்சுவை அமுதானவர் பாதந்தலை வைத்தான்.

"கருமை நிறங்கொண்ட பெரிய மேகம் போன்ற நிறத்தையுடையவராகிய திருமால், கவிமட்டுமல்லாது சிவஞானியராகவும் விளங்கிய திருஞானசம்பந்தர் அப்பர் ஆகிய தேவார ஆசிரியர்கள் கண்ணினால் உண்ணும் சுவை மிக்க அமுதம் போன்றவராகிய சிவபெருமான் ஆகியோரது திருவடிகளைப் பார்த்தன் தன் தலைமீது கொண்டான்" என்பது இப்பகுதியின் பொருளாகும். சிவபிரானைச் '**சுவை அமுதானவர்**' என்று கூறிய வில்லிபுத்தூராரின் மெய்யுணர்வைப் பாராட்ட வார்த்தைகள் கண்டிலேம்! இவ்வாறின்றி, கவிஞானியர் என்பதற்கு முதலாழ்வார்கள் மூவர் என்றும் சுவை அமுதானவர் என்பதற்குத் திருமால் என்றும் பொருள் கூறியுள்ள உரைகாரரின் பொருந்துமோ?

அடுத்து, அருச்சுனன் திருவெண்ணெய்நல்லூர், திருவதிகை ஆகிய இரு சிவத்தலங்களையும் திருவஹீந்திரபுரம் என்னும் திருமால் தலத்தையும் தரிசித்தான் என்பதை இச்சருக்கம் 17-ம் பாடல் கூறுகிறது. அப்பாடலைக் கீழே காண்க.

ஐயானனனியல் வாணனை அடிமைகொள மெய்யே
பொய்யாவண மெழுதும்பதி பொற்போடு வணங்கா
மெய்யாகம வதிகைத்திரு வீரட்டமு நேமிக்
கையாளன கீந்திரபுரமுங் கண்டுகை தொழுதான்.

"ஐந்து திருமுகங்களையுடையவரான சிவபிரான இயற்றமிழ்ப் புலவரான சுந்தரமூர்த்தி நாயனாரை தடுத்தாட் கொள்ளும்பொருட்டு பொய்யாகிய அடிமையோலையை மெய் போலவே எழுதிய தலமாகிய திருவெண்ணெய் நல்லூரையும், உண்மையான சிவாகமங்களிற் கூறப்பட்ட விதிப்படி அருச்சனைகள்

நடைபெறுகின்ற திருவதிகை வீரட்டானம் என்ற தலத்தையும், சக்கராயுதத்தைக் கையிலேந்திய திருமாலினது திருவகீந்திரபுரம் என்னும் தலத்தையும் தரிசித்து கைகள் கூப்பி வணங்கினான். தலத்தை வணங்குதல் என்பது அத்தலத்துக் கோயில் கொண்ட இறைவனை வணங்குதல் என்பதாம்.

இத்திருப்பாடலின் முதலிரண்டு அடிகளின் மூலம் வில்லிபுத்தூரார் சிவபிரானையேயன்றி அவனது அடியார்களையும் மதித்துப் போற்றும் இயல்பினர் என்பதும் தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானின் பெரியபுராணத்தை நன்கு கற்றவர் என்பதும் தெளிவாகின்றது. விரிவஞ்சி இங்கு நாம் சுந்தரரைப் பெருமான் தடுத்தாட்கொண்ட வரலாற்றை எழுதவில்லை. திருவதிகை வீரட்டானத்தை **மெய்யாகம அதிகை** எனப் போற்றியதன் மூலம் அத்தலம் அக்காலத்தில் மிக்க சிறப்புடன் ஆகமவிதிகள் தவறாது பூசனைகள் இயற்றப் பெற்றுச் சிறந்திருந்ததென்பதைக் காட்டுகின்றார் எனக் கொள்க.

சைவசம்பிரதாயத்தில் கோயில் என்றாலே நினைவுக்கு வருவதும், தரிசிக்க முக்தி எனச் சாத்திரங்களால் போற்றப் படுவதுமாகிய சிதம்பரத்தலத்தின் பெருமையைக் கவிஞர் எந்த அளவுக்கு அறிந்திருந்தார் என்பதற்குச் சான்று பகடும் பாடல் இதோ காண்மின்.

இன்னம்பல பலயோனியில் எய்தாநெறி பெறவே
முன்னம்பல ரடிதேடவு முடிதேடவு மெட்டா
அன்னம்பல பயில்வார்புன லணிதில்லையு ளாடும்
பொன்னம்பல நாதன்கழல் பொற்போடு பணிந்தான்.

(அருச்சுனன் தீர்த்தயாத்திரைச்சருக்கம், 18ம் பாடல்)

"முற்காலத்தில் திருமாலும் நான்முகனும் முறையே திருவடியையும் திருமுடியையும் தேடவும் அவர்களுக்கு எட்டாத திருவுருவங் கொண்டிருந்தவரும், பல அன்னப் பறவைகள் தங்குதலையுடைய நீர்வளம் மிக்க அழகிய தில்லை எனப்படும் **சிதம்பரத்தலத்திலே** திரு நடனஞ் செய்கின்ற பொன்னம்பல நாதனுமாகிய சிவபிரானது திருவடிகளை, மீண்டும் பலவகைப்பட்ட பிறப்புக்களில் பிறவாத தன்மையையடைய வேண்டி அன்போடு வணங்கினான்" என்பது இப்பாடலின் பொருளாகும்.

பிரமதேவன், திருமால் என்ற இருவர் தேடியதைப் பலர் என்றது தமிழ்வழக்கின்படியாகும். ஒன்றுக்கு மேற்பட்டது பல ஆகையாலென்க. இப்பாடலில் தேடியவர்களது பெயர்களைக் குறிப்பிடாதது, அடி முடி தேடியவர்கள் திருமாலும் நான்முகனுமேயாவர் என்பது ஸகல புராண பிரசித்தமான வரலாறு ஆகையால் என்று கொள்க. எனவே பரமவைணவராகிய வில்லிபுத்தூராழ்வார், லிங்கபுராணம்

ஸ்காந்த புராணம் போன்ற சிவபுராணங்களிலும் மற்றும் திருமுறைகளிலும், சைவநூல்களிலும் விதந்து ஓதப்பட்ட பிரமவிட்டுணுக்கள் சிவபிரானது திருமுடியையும் திருவடியையும் தேட முற்பட்டுத் தோல்வியுற்ற வரலாற்றை ஏற்றுக் கொண்டவராதல் காண்க. வேறுசில இடங்களிலும் வில்லிபுத்தூரார் இந்த வரலாற்றைப் பாடியுள்ளது வருமிடங்களில் காட்டுவோம். எனவே, சிவபிரானாரது பரத்துவத்துக்கு வில்லிபாரதத்தில் இதனினும் மேலான சான்று வேண்டுமோ? தரிசிக்க முத்தியளிக்கும் தலம் சிதம்பரம் என்பதையும் அருச்சுனன் மீண்டும் பிறவாநெறி அடையத் தில்லையம்பலத்துள் பொன்னம்பலநாதனின் திருவடிகளைத் தரிசித்து வணங்கினான் என்று கூறுவதன் மூலம் நிலைநாட்டியுள்ளதும் கண்டு கொள்க. சிதம்பரம் என்றாலே சைவர்கள் அடையும் ஆனந்தத்தில் தாம் ஒரு சிறிதும் குறையாதவர் என்பதையும் இப்பாடலின் மூலம் புலப்படுத்துகின்றரன்றோ?

அடுத்தபடியாக அருச்சுனன் திருவரங்கம் முதலான சோழநாட்டுப்பதிகல் பலவற்றைத் தரிசித்துப் பின் மதுரை வந்து சேர்ந்தான். மதுரை மாநகரம் வைகை நதியின் கரையில் உள்ள சிவராஜதானியாகும். அதனைப்பாடும் புலவர் எவரும் வைகை நதியைப் பாடாமலிரார். வில்லிபுத்தூராரும் மதுரையைக் குறிப்பிடும்போது வைகையையும் நினைவு கூர்கிறார். வைகைநதி என்றதுமே அவரது நினைவுல் வருவது திருஞானசம்பந்தப் பெருமான் '**வாழ்க அந்தணர்**' எனத் தொடங்கும் திருப்பாசுரத்தை எழுதி வைகையில் இட்ட ஏடு நதியின் வெள்ளத்தை எதிர்த்து நீரைக் கிழித்துக் கொண்டு சென்ற வரலாறேயாம். இதனால் வில்லிபுத்தூரார் சைவ சமயசாரியர்களின் அருள்வரலாற்றைப் போற்றும் பண்புடையவர் என்பதையும் அறிந்து கொள்ளலாம். இதோ, அப்பாடற் பகுதியைப் பாருங்கள்.

இளவண்டமிழ் எழுதேடுமுன் எதிரேறிய துறைசூழ்
தளவங்கமழ் புறவஞ்செறி தண்கூடல் புகுந்தான்.
(அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம், 20ம் பாடல்)

"இளமையையும் வண்மையையுமுடைய தமிழ்ப்பாசுரம் எழுதப் பெற்ற ஏடு முன்பு கரையெதிர்த்துச் சென்ற (வைகையாற்றின்) துறையையடுத்ததும் முல்லை மலர் மணம் வீசப் பெற்ற காடுகள் சார்ந்ததுமான குளிர்ச்சி பொருந்திய கூடல் என்ற ஒரு பெயரையுமுடைய மதுரை மாநகரத்துள் சென்று சேர்ந்தான்" என்பது மேற்காடிய இரண்டு அடிகளின் திரண்ட பொருளாகும்.

அருச்சுனன் மதுரை சென்றடைந்து பாண்டியராஜனைக் கண்டான் என்பதை அசிரியர் பின் வரும் பாடலாற் கூறுகின்றார்.

குன்றிலிள வாடைவரும் பொழுதெல்லா
மலர்ந்ததிருக் கொன்றைநாறத்

தென்றல்வரும் பொழுதெல்லாஞ் செழுஞ்சாந்தின்
மணநாறுஞ் செல்வவீதி
நன்றறிவார் வீற்றிருக்கு நான்மாடக்
கூடல்வள நகரியாளும்
வென்றிபுனை வடிசுடர்வேல் மீனவனை
வானவர்கோன் மதலைகண்டான்.
(அருச்சினன் தீர்த்த யாத்திரைச் சருக்கம், 21ம் பாடல்)

இப்பாடலில் முதல் வரியில் குன்று எனக்குறிப்பிட்டது திருக்கயிலாய மலையையாகும். வாடைக்காற்று திருக்கயிலாய மலையினையும் கொன்றையின் நறுமணத்தால் அதன் மீது வீற்று இருக்கும் பெருமானையும் நினைவூட்டுகின்றது என்பதே முதலடியின் கருத்தாமெனக் கொள்க. தென்றற்காற்று சிவபெருமானின் பக்தரான அகத்தியர் எழுந்தருளியிருக்கும் பொதிய மலையைச் சந்தன மணத்தால் நினைவூட்டுகின்றது. இது இரண்டாமடியால் பெறப்படும் செய்தி. அடுத்து மூன்றாமடியில் நன்றறிவார் வீற்றிருக்கும் **நான்மாடக்கூடல்** என்பதில் நன்றறிவார் என யாரைக் குறிப்பிட்டுள்ளார் எனப்து பற்றிச் சிறிதே சிந்திப்பாம். உரைகாரர் இதற்குப் பொருள் "நன்மையையறியும் மேன் மக்கள்" எனக் கூறியுள்ளதும் பொருந்துமோ? சிவபிரானையே **நன்றறிவார்** எனப்பாடியுள்ளார் கவி எனக் கொள்வதில் உள்ள குறைதான் யாதோ? திருஞானசம்பந்தப் பெருமான் சிவபிரானை **'நன்றுடையானைத் தீயதில்லானை'** எனப் பாடியுள்ளதை இங்கு நினைவு படுத்துகிறோம். அதே முறையில் வில்லிபுத்தூராரும் உலகத்து உயிர்கள் அனைத்துக்கும் நல்லன எவையோ அவற்றை அறிபவர், அறிந்த வண்ணம் அருளுபவர் என்ற பொருளிலேயே சிவபிரானை **நன்றறிவார்** எனப் போற்றியுள்ளார் எனக்கோடலே தக்கதாகும். நான்மாடக்கூடல் என்ற மதுரையின் மற்றொரு பெயரைக் கூறியவர் அதன் வரலாற்றையறியாதிருப்பரோ? ஒரு காலத்தில் வருணன் சோமசுந்தரக் கடவுளின் வல்லமையைச் சோதிக்கவெண்ணி, ஏழு மேகங்களையும் பெருமழை பொழிந்து மதுரையை அழிக்கும்படி ஏவ, அங்ஙனமே வந்து அளவின்றி மழை பொழிந்த ஏழு மேகங்களின் செயலைத் தடுக்கும் பொருட்டு அக்கடவுளின் கட்டளையால் அவரது சடைமுடியினின்றும் புறப்பட்டு நான்கு மேகங்களும் மேலுயர்ந்து நான்கு மாடங்களாகக் கூடி மழையைத் தடுத்ததால் நான்மாடக் கூடல் என்னுமொரு பெயர் அந்த நகரம் பெற்றது. இங்ஙனம் மதுரையின் மாஹாத்மியத்தை முற்றிலும் அறிந்திருந்த பெரியாராகலின் மதுரைச் சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளிய மதுரை என்ற பொருளிலேயே **நன்றறிவார் வீற்றிருக்கும் நான்மாடக்கூடல்** என்று பாடியுள்ளார் என்று கொள்க.

மதுரைமாநகரின் மாஹாத்மியத்தைக் கூறும் நூல்களுள் சிறந்தவை வடமொழியில் உள்ள ஹாலாஸ்ய மாஹாத்மியமும், தமிழில் பரஞ்சோதி முனிவர்

பாடியருளிய திருவிளையாடற்புராணமுமாம். இவ்விரண்டிலும் வில்லிபுத்தூரார் மிக்குப் பயிற்சியுடையார் என்பது மட்டுமல்லாது சிவபெருமானின் முதன்மையையும் அருளாடல்களையும் கூறும் சைவப் பெருநூல்களைப் போற்றிய பண்பினருமாவர் என்பது முன் 21ம் பாடலில் 'நான்மாடக்கூடலான' வரலாற்றைச் சொன்னவர், பின்னர் 23ம் பாடலில், 'இந்திரன்முடி மீது வளையெறிந்த' வரலாற்றை 'வெய்தின் மகபதி முடியில் வளையெறிந்து மீண்ட நாள்' என்றும், இவ்வரலாற்றுடன் 'கடல் சுவற வேல் விட்ட' வரலாற்றைச் சேர்த்து இதே சருக்கம் 34ம் பாடலிலும் அருமையாகக் கூறியுள்ளமையால் புலனாகின்றது. இரண்டு வரலாறுகளும் ஒருங்கே கூறப்பட்ட 34வது பாடலைக் கீழே காணுங்கள்.

ஐந்தருவின் நீழலில்வாழ் அரியுடனே
ஓரரியா சனத்தின் வைகிப்
புந்தியுற வொருவருமுன் பூணாத
மணியாரம் பூண்ட கோமான்
அந்தவுரை செவிப்படலும் அதிதூரம்
விழைவுடன் சென்றாடு தீர்த்தம்
வந்தநந் தவப்பயன் என்றுட்கொண்டான்
மகோததியும் வணங்குந் தாளான்.

(அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம், 34ம் பாடல்)

“தெய்வீகமான ஐந்து மரங்களின் நிழலில் வாழ்கின்றா இந்திரனுடனே ஒரு சிங்காதனத்தில் உடன் வீற்றிருந்து முன் ஒருவரும் அணிந்திராத இரத்தின மாலையை மனம் மகிழ அணிந்து கொண்ட தலைவனும், பெரிய கடலும் வணங்கிய திருவடிகளையுடையவனுமான அப்பாண்டியவரசன் தன்னுடைய செவிகளில் அந்தவுரைபட்டவுடனேயே, வெகுதூரம் சென்று விருப்பமுடன் செய்யும் தீர்த்தயாத்திரையை முன்னிட்டு இங்கு அருச்சுனன் வந்து நமது தவத்தின் பயனே எனவெண்ணி மகிழ்ந்தான்” என்பது மேலே காட்டிய பாடலின் திரண்ட பொருளாகும்.

முதலில் அருச்சுனன் என்று அறியாது அவனை தீர்த்த யாத்திரை செல்லும் ஓர் வைதிகமுனி என்று மட்டுமே அறிந்த பாண்டியன் பின்னர் அருச்சுனன் பாண்டியன் மகள் சித்திராங் கதையைக் காந்தருவ முறையில் கூடி மகிழ்ந்த பின்னர், அச்சித்திராங்கதையின் செவிலித்தாயார் மூலம் வந்தவன் பாண்டவரில் ஒருவனான அருச்சுனனே என்ற வார்த்தையைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தான். இச்செய்தியைக் கூறிய இப்பாடலில் பாண்டியனைக் குறிக்குமிடத்துத் திருவிளையாடற் புராணச் செய்திகளைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார் என்பது சைவர்கள் அறிந்து மகிழ வேண்டியதொன்றாகும். அவ்வரலாறுகளையும் சிறிது இங்குக் கூறுவோம்.

வில்லி பாரதத்தில் சிவபிரான் பெருமை

மலயத்துவச பாண்டியனது மகளாகிய தடாதகைப் பிராட்டியாரைத் திருமணம் புரிந்து கொண்டு சுந்தரபாண்டியராகிப் பாண்டியநாட்டை அரசுபுரிந்து வந்த சோமசுந்தரக் கடவுள் (மதுரையில் சிவபிரானது திருநாமம்) அவளிடம் தனக்குப் பிறந்த குமாரனும் முருகனது அம்சமானவனுமான உக்கிரகுமார பாண்டியனுக்கு முடிசூட்டி, அவனுக்குப் பகையாகப்போகும் கடலையும், இந்திரனையும், செருக்கடைந்த மேருமலையையும் வெல்லுமாறு முறையே வேல், வளை, செண்டு ஆகியவற்றைக் கொடுத்துப் போயினன். பின்னர் உக்கிரகுமார் பாண்டியன் அரசுபுரிந்த காலத்தில் தமிழ்நாடு முழுவதும் பன்னிரண்டு வருஷங்கள் மழைபொழியாது பஞ்சம் உண்டாயிற்று. அது கண்டு வருந்திய சேர, சோழ, பாண்டியரென்னும் முடிமன்னர் மூவரும் பொதிய மலை சென்று அகஸ்தியரிடம் முறையிட்டு, அவர் உபதேசப்படி சோமவார விரதமிருந்து, விண்வழியே செல்லும் ஆற்றல்பெற்று, மழை பெய்விப்பவனாகிய இந்திரனது சபா மண்டபத்தைச் சென்றடைந்தனர். இவர்களது வரவையறிந்த இந்திரன் இவர்கள் அமரும்பொருட்டுத் தன் ஆசனத்திலும் தாழத்தனியே மூன்று சிங்காதனங்கள் இடுவித்தனன். சேரன் சோழன் ஆகிய இருவரும் இந்திரன் இடுவித்திருந்த ஆசனங்களீல் அமர்ந்தனர். உக்கிரகுமாரனோ அங்ஙனமின்றித் தேவராஜனது அரியாசனத்தில் ஏறி அவனுக்குச் சமமாக வீற்றிருந்தனன். அது கண்டு பொறாத இந்திரன் மற்றை இருவரையும் விசாரித்து வந்த காரியமறிந்து அவர்கள் நாட்டிற்கு மழை பொழியுமாறு வரந்தந்து அனுப்பினன். பாண்டியனை அவமானப்படுத்தக்கருதி ஒரு சூழ்ச்சியை மனதில் எண்ணி அவனுக்கு ஒரு சிறப்பு செய்வான் போல எண்ணிறந்த தேவர்கள் சுமக்கலாற்றது வருந்திக் கொணர்ந்த மிக்க பாரமுடைய பெரியதொரு மாலையை அவனுக்குக் கொடுத்தனன். உடனே பாண்டியன் அதனைத் தனது பெருவலிமையால் எளிதில் வாங்கிப் பூமாலை போன்று தன் கழுத்திலணிந்து கொண்டனன். இந்திரன் அதனைக் கண்டு பெருவியப்புற்றுப் பாண்டியனை நோக்கி “இன்று முதல் உலகமெல்லாம் உன்னை ஆரம் தாங்கு பாண்டியன் என்று மதிப்பதாக” என்று புகழ்ந்து கூறினான். உக்கிரகுமார பாண்டியன் அப்புகழ்ச்சியைச் சற்றும் பொருட்படுத்தாது, இந்திரனை மதித்துத் தான் வந்த காரியத்தையும் கூறாது. அவனரியணையினின்றும் இறங்கித் தனது நகரம் அடைந்தான். இதனால் மற்ற இரு நாடுகளிலும் மழை பெய்யப் பாண்டியநாடு மட்டும் மழையின்றி இருந்தது. அச்சமயம் பொதியமலைச்சாரலில் வேட்டையாடச் சென்றிருந்த பாண்டியன் அங்கு மேய்ந்து கொண்டிருந்த மேகங்களைப் பிடித்துத் தளையிட்டுச் சிறையிலடைத்தனன். அதனால் கோபங்கொண்ட இந்திரன் பாண்டிய நகரைச் சூழ்ந்து கொடும்போர் புரிந்து, பாண்டியன் மீது தனது வச்சிரப் படையை ஏவினன். உடனே பாண்டியன் சிவபிரான் தனக்களித்த வளை யென்னும் சக்கரப்படையினை இந்திரன் மேல் செலுத்த, அப்படை இந்திரனது வச்சிராயுதத்தை வீழ்த்தி

இந்திரனுடைய மகுடத்தைக் கீழேதள்ளிச் சிதைத்தது. இந்திரன் அஞ்சித் தோற்றோடு பாண்டியனிடம் சமாதானம் செய்துகொண்டு மேகங்களை விடுவிக்கப்பெற்று அதற்கு ஈடாக மழையைப் பெய்வித்தான். இதுவே இந்திரன் முடி மீது வளையெறிந்த படலத்தின் சுருக்கம். விரிவு திருவிளையாடற் புராணத்தில் காண்க.

மகோததியும் வணங்குந் தாளான் என்பதால் குறித்த வரலாறு அதே திருவிளையாடற் புராணத்துக் கடல்சுவற வேல்விட்ட படலத்துச் செய்தியாகும். உக்கிரகுமார பாண்டியன் அசுவமேதயாகங்கள் தொண்ணூற்றாறு செய்து முடித்ததும் இந்திரன் பொறாமை கொண்டு, கடலரசனான வருணனை அழைத்து மதுரையை அழிக்குமாறு ஏவினன். அங்ஙனமே நள்ளிரவில் கடல் மதுரையை நெருங்கினபோது, பாண்டியன் தனது தந்தையார் அளித்தா முப்படைகளுள் ஒன்றான வேற்படையை கடல் மீது எறிய அது பட்டவுடனே கடல் வறண்டு பாண்டியன் கால் மட்டமாயிற்று. அது தோற்றவன் வென்றவனை வணங்குதல் போல அமைந்தது. அதனால் பெருங்கடலும் வணங்கும் பாதங்களையுடையவன் எனக் குறிப்பிட்டார். இவ்விரண்டு வரலாறுகளும் உக்கிரகுமார பாண்டியனது ஆயினும் அவற்றை சித்திரவாகனன் என்னும் பாண்டியன் மீது ஏற்றியது கவிமரபு எனக் கொள்க. திருவிளையாடற்புராணத்து இவ்வரலாறுகளைக் குறிப்பிடாமலேயே கதையைத் தொடர்புபடுத்திச் செல்லக்கூடுமாயினும், வில்லிபுத்தூரார் இவைகளைக் குறிப்பிட்டது சிவபிரானையும், சிவபுராணங்களையும் எவ்வளவு தூரம் அவர் மதித்துப் போற்றிய நற்பண்பினராய், நடுநிலையாளராய் இருந்தார் என்பதற்குச் சான்றாகின்றது.

பாண்டியன் தன் மகள் சித்திராங்கதையை அருச்சனனுக்கு மணஞ்செய்து கொடுக்க ஒருப்பட்டு அங்ஙனமே இருவரும் திருமணம் செய்து கொண்டார்கள் என்பதைப் பின்வரும் பாடல் கூறுகிறது.

இந்திரனுஞ் சசியுமென இறையோனும்
உமையுமென எம்பி ரானும்
செந்திருவு மெனக்காம தேவுமிர -
தியுமெனவெஞ் சிலைவ லோனும்
சந்தணிபூண் முலையாளும் சதுர்மறையோர்
சடங்கியற்றத் தழல்சான் றாகத்
துந்துபியின் குலமுழங்கச் சுரிசங்கின்
குழாந்தழங்கத் துலங்க வேட்டார்.

(அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம், 41ம் பாடல்)

“இந்திரனும் இந்திராணியும் போலவும், இறையோனாகிய சிவபிரானும் பார்வதியும் போலவுன், எமது தலைவனாகிய திருமாலும் அழகிய இலக்குமி தேவியும் போலவும், மன்மதனும் இரதியும் போலவும், அருச்சனனும் சித்திராங்கதையும் நான்கு வேதங்களில் வல்லவர்களான அந்தணர்கள் விவாகச் சடங்குகளைச் செய்விக்க, அக்கினி சாக்ஷியாகத் திருமணஞ் செய்து கொண்டார்கள்” என்பது மேற்படி பாடலில் போந்த செய்தியாகும். இப்பாடலில் சிவபிரான், திருமால் ஆகிய இருவரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். நாம் முன்னரே எடுத்துக் காட்டியபடி திருமால் வில்லிபுத்தூரார் பிறந்த குலத்துக்கு வழிபடு கடவுளாவர். எனவே எம்பிரான் என்று திருமாலைக் குறிப்பிட்டது முற்றிலும் சரியே. அதே பாடலில் சிவபிரானை இறையோன் எனக்குறிப்பிட்டது தான் சிறப்பு. வில்லிபுத்தூராரின் உள்ளத்தில் சிவபிரானே முழுமுதற் கடவுள் என்ற எண்ணம் உறுதியாக இருந்தது. அதனாலேயே சிவபிரானை இறையோன் என்றும், திருமாலைத் தமது தலைவர் என்ற அளவுக்குட்படுத்தியும் பாடியுள்ளார் என்பது நாம் அறிந்து இன்புற வேண்டியதாகும். தனியாகத் திருமாலை மட்டும் பாடும்போது, எங்ஙனம் பாடியிருப்பினும், ஒரே சமயத்தில் இருவரையும் பாடும் போது சிவபிரானுக்கே ஏற்றம் கொடுத்துப் பாடியுள்ளார். வேறு சிலவிடத்தும் இம்மாதிரியுள்ளது வரும்போது காட்டுவோம்.

பின்னர் அருச்சுனன் திருமாலிருஞ்சோலை, சேது முதலிய தலங்களையும் மேலும் சில புண்ணிய தீர்த்தங்களையும் தரிசித்தும் நீராடியும் மேற்குக் கடற்கரையில் உள்ள கோகர்ணம் என்ற சிவத்தலத்தை அடைந்தான் என்பதைக் கூறும் பாடல் இதோ தருகிறோம்.

அந்நெடுந் திசைப்புனல்கள் ஆடுநாளில்
ஐந்துதடத் தரம்பையர்ஓர் ஐவர்சேர
இந்திரன்வெஞ் சாபத்தால் இடங்கராகி
இடருழந்தோர் பழையவடி வெய்தநல்கி
சிந்துதிரை நதிபலவுஞ்சென்று தோய்ந்து
திங்களுடன் அரவுறவு செய்யும்வேணிக்
கொந்தவிழும் மலரிதழித் தொடையோன்வைகும்
கொடிமதில்சூழ் கோகன்னம் குறுகினானே.

(அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம், 48ம் பாடல்)

“அந்த நீண்ட திக்குகளில் உள்ள தீர்த்தங்களில் எல்லாம் ஆடுங்காலத்தில், ஐந்து தடாகங்களில் தேவேந்திரனால் உண்டான ஒரு கொடிய சாபத்தால் முதலைகளாகித் துன்பத்துள்ளாகியிருந்து உழன்று கொண்டிருந்த தேவமாதர்கள் ஐவர் பழைய வடிவம் அடையுமாறு செய்து, மேலும் அலை வீசுகின்ற நதிகள்

பலவற்றிலும் சென்று நீராடி, சந்திரனுடனே பாம்பு உறவாடுகின்ற சடாமகுடத்தில் கொத்துக்கள் விரிந்த கொன்றை மலர் மாலையை அணிந்த சிவபிரான் உறைகின்ற **திருக்கோகன்னம்** என்ற திருத்தலத்தை அடைந்தான்" என்பது மேற்படி பாடல் குஊறும் செய்தியாகும். இப்பாடலின் "திங்களுடன் அரவு உறவு செய்யும் வேணி" என்ற பகுதி திருநாவுக்கரசு நாயனாரின் திருவதிகை வீரட்டானத்துப் போற்றித் திருத்தாண்டகம் 4வது திருப்பாடலில் உள்ள "பாம்பும் மதியமும் புனலுந் தம்மிற் பகை தீர்த்துடன் வைத்த பண்பா போற்றி" என்னுமடியை நினைவூட்டுகின்றதன்றோ? இங்ஙனம் சிவபிரானைத் திருமுறை ஆசிரியர்களை அடியொற்றி வில்லிபுத்தூரார் பாடியுள்ளது அவரது மெய்யுணர்ந்த உள்ளத்துக்கு மேலும் சிறந்த சான்றாகும். "கொந்தவிழும் மலரிதழித் தொடையோன்" என்று பாடியுள்ளதும் சிவபிரானின் அடையாள மாலையும் பிரணவ புஷ்பம் என்று போற்றப்படுவதுமான கொன்றை எந்த அளவுக்கு ஆசிரியரின் உள்ளத்தைக் கவர்ந்திருந்தது என்பதைப் புலப்படுத்துகின்றது.

கோகன்னத் திருப்பதியில் சிவபிரானைப் பார்த்தன் வணங்கினான் என்பதைக் கூற வந்த கவி தம் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த சிவபிரானது முப்புரமெரி செய்த வீரத்தை மீண்டும் போற்றியுள்ளதை இதே சருக்கம் 49ம் பாடலின், **ஆகன்னமுறச் செம்பொன் வரைவில் வாங்கி அவுணர்புரம் கட்டழித்தோன் அடியில் வீழ்ந்து** என்ற முதல் அடியில் காணலாம். "காதளவு பொருந்துமாறு செவ்விய பொன் மலையை வில்லாக வளைத்து, அவுணர்களின் முப்புரத்தை முற்றிலும் அழித்தவனாகிய சிவபிரானது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி" என்பது இப்பாடற்பகுதியின் பொருளாகும். முப்புரம் எரிசெய்த வீரம் பற்றி நாம் முற்கூறியவற்றையும் இங்குக் கொள்க.

பின்னர் அருச்சுனன் ஸ்ரீகிருஷ்ணனது தங்கையான சுபத்திரை என்னும் மங்கை நல்லாளை மணஞ்செய்து கொள்ளும் விருப்பத்தால் துவாரகை செல்ல விரும்பித் துறவியின் கோலத்தில் சென்றான். ஆனால் நேரே துவாரகை செல்லாது அதைச் சார்ந்த ரைவதும் என்னும் மலையில் ஓர் ஆலமரத்தின் நீழலில் தங்கித் தன் உயிர்த் தோழனான கண்ணனை நினைத்தான். இங்கு ரைவதமலையில் ஆலமரத்து நீழலில் அருச்சுனன் திருக்கயிலாயமலையில் ஆலமர நீழலில் அன்று சனகாதியர்க்கு ஞானோபதேசம் செய்ய மோனமுத்திரையுடன் வீற்றிருந்த தக்ஷிணாமூர்த்தியாகிய சிவபெருமானின் திருக்கோலமே மனக்கண்ணில் தோன்றியது போலும், தோன்றவே, அங்ஙனமே பாடலாக வந்தது. இந்தக் கட்டத்தில், சிவபிரானைக் குறிப்பிட வேண்டிய அவசியம் ஏதும் கதைப் போக்கில் இருக்கவில்லை. ஆயினும் ரைவதமலை, ஆலமரம், துறவிக் கோலம் இவற்றைக் கண்டவுடன் திருக்கயிலை, அங்குக் கல்லால மரம் அதன் கீழ் தக்ஷிணாமூர்த்தி

திருக்கோலம் ஆசிரியரது கண் முன் தோன்றி விட்டனவே! எனவே சிவபிரானைப் பாடாதிருக்க அவரால் இயலவில்லை. சிவபிரானின் முழுமுதன்மை எந்த அளவுக்கு அவரால் உட்கொள்ளப்பட்டிருந்ததென்பதற்கு இத்தகைய பாடல்களே பெருஞ் சான்றாகும். அப்பாடல் முழுவதையும் படித்து மகிழுங்கள்.

யதியாகி அவணிருந்த தோழன்தன்னை
யதுகுலநா யகன்பரிவோ டிறைஞ்சவன்பால்
அதியான நெடுஞ்சுருதி ஆசிகூறி
ஆகமுறத் தழீஇமகிழ்வுற் றாலநீழல்
மதியார்செஞ் சடைமுடியோன் என்னவைகி
வந்தவாறு உரைப்பநெடு மாலுங்கேட்டு
துதியாடிக் காலையிலே வருதுமென்று
சொற்றிமைப்பின் மீளவும்போய்த் துவரைசேர்தான்"

"துறவிக் கோலத்துடன் அங்கு வீற்றிருந்த அருச்சுனனை இடையர் குகத்தலைவனாகிய கண்ணன் அன்புடன் வணங்க, அன்பால் மேம்பட்ட மறை வழக்கப்படி ஆசிகள் கூறி, மெய் பொருந்தத் தழுவி மகிழ்ந்து, ஆலமரத்தின் நிழலில் நால்வர்க்கு மெய்ப்பொருள் உணர்த்த குருமூர்த்தியாய் வீற்றிருந்த பிறைச்சந்திரனையணிந்த சிவந்த சடையினையுடைய சிவபெருமானைப் போல அருச்சுனன் வீற்றிருந்து, தான் வந்த வரலாற்றைக் கூற அதுகேட்ட கண்ணனும் அவனைத் துதிசெய்து "காலையில் வருகின்றோம்" எனச்சொல்லி மீண்டும் துவாரகை நகரையடைந்தான் என்பது இப்பாடலின் பொருளாகும். இன்கு அருச்சுனனைக் கல்லால் நீழலமர்ந்த தக்ஷிணாமூர்த்தியன உவமித்ததில் மற்றொரு நயமுங்காண்கின்றோம். துறவிக்கோலத்தில் இருந்தமையால் அக்கோலத்துக்குரிய பெருமையை உண்ர்த்த வேண்டி கண்ணனும் அருச்சுன சந்நியாசியை வணங்கினான் என்று கூற வந்த கவி, கண்ணன் தமது வழிபடு கடவுளாகையால் அவன் தன்னினும் கீழ்ப்பட்டோரை வணங்குதல் தகாது என்ற கருத்தினால் அருச்சுனனை உயர்ந்தோனாகிய சிவபெருமான் போல வீற்றிருந்தான் எனக் கூறியுள்ளார் என்பதே அந்த நயம் என்று கொள்க. இதனால் சிவபெருமான் கண்ணனைவிட உயர்ந்தவர் என்பதும், இப்பாடலில் கண்ணனை நெடுமால் என்று உரைத்தமையால் அக்கண்ணனுக்கு மூலமான மஹாவிஷ்ணுவையும்விட உயர்ந்தவர் என்பதும், வில்லிபுத்தூராரின் கருத்து என்பது தெளிவாகின்றதன்றோ?

அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் கண்ணன் உதவியால் திருமணம் நடைபெற்று, சுபத்திரை தேரோட்ட அருச்சுனன் தீர்த்த யாத்திரை முடிந்து இந்திரப்பிரஸ்தம் திரும்புகின்றான். அபிமன்யு, உப்பாண்டவர் உற்பத்தி முதலியவற்றைக் கூறி இச்சருக்கம் முடிகிறது. பாரதக் கதை முழுவதும்

தொடர்பாகக் கூறும் கடப்பாடிலேமாதலால் இவற்றை யாம் விரித்தெழுதவில்லை. சருக்க முடிவில் உள்ள பாடல் சிவனாரது நினைவுடன் முடிகிறது. அதனைப் பார்ப்போம்.

உரனா லழகா லுரையான்மற் றுவமை யில்லா
நரநர ரணர்க்கு நலங்கூர்தரு நண்பு போல்வான்
அரனார் விழியா லழிந்தங்க மநங்க மான
மரனா ருடனண் பிசைந்தன்று வசந்த காலம்.

(அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம், 90-ம் பாடல்)

“வலிமையால், அழகால், சொல்லால், தமக்குத் தாமேயன்றி பிற உவமை சொல்ல முடியாத அருச்சுனனுக்கும் கிருஷ்ணனுக்கும் நன்மை மிக்க நட்புப் போல சிவபிரானது நெற்றிக் கண்ணால் உடல் வெந்து உடலற்று அருவமான மன்மதனுக்குத் தோழமை பூண்டு வசந்த காலம் வந்தது” என்பது இப்பாடலால் பெறும் செய்தியாகும். அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கத்தில் சிவபிரான் மஹிமையை வாய் கொள்ளாது பாடிய வில்லிபுத்தூரார் இச்சருக்கத்தை சிவ நினைவுடனேயே முடித்தது கவனித்தற்குரியதாம். தீர்த்த யாத்திரைச் சருக்கம் போலவே சிவபிரானின் முழு முதன்மை விளங்கப் பாடப்பட்டுள்ளது. அருச்சனன் தவநிலைச் சருக்கமாகும்.

இனி, எட்டாவது காண்டவதகனச் சருக்கத்துள் வில்லியார் சிவபிரானைப் போற்றும் இரண்டு இடங்களைக் குறிப்பிட்டு இக்கட்டுரையை முடிப்போம். சிவபிரானின் முப்புரமெரி செய்த அருஞ்செயலே வில்லிபுத்தூரார் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது என்பதை முன்னரே விளக்கியுள்ளோம். காண்டவவனம் அக்கினிதேவனுக்கு கிருஷ்ணார்ச்சுனர்களால் உணவாக அளிக்கப்பட்டு அவனால் எரிக்கப்பட்ட நிகழ்ச்சியைக் கூறும் இச்சருக்கத்துள்ளும் இரண்டு பாடல்களில் கவி, இறைவனார் முப்புரமெரி செய்த வீரத்தைப் பாடியுள்ளார்.

காண்டவவனம் எரித்த பொழுது அங்கு வாழ்ந்த அசுரர்களில் தப்பிப் பிழைத்தவர்கள் யாரும் இல்லை என்று சொல்ல வந்த கவி, இச்சருக்கத்து 43-ம் பாடல் முதலிரண்டு அடிகளால் முப்புரங்களை முனிந்த முக்கண்ணனைப் பாடியுள்ளது காண்க.

முப் ரங்களை முக்கணன் முனிந்தநாள்
மூவரம் முழுத் தீயில்
தப்பினார் உளர்காண்டவ அடவிவாழ்
தான வர்யார் உய்ந்தார்.

"முப்புரங்களை முக்கண்ணானாகிய சிவபிரான் கோபித்து எரித்தபோது தப்பினவர் மூவர் உள்ளனர். காண்டவ வனம் எரிந்த போது அதில் வாழ்ந்த அசுரர்களில் தப்பினவர் ஒருவருமிலர்" என்பது மேலே காட்டிய பாடற் பகுதியின் பொருளாகும்.

அடுத்து, இதே சருக்கத்தில் 47-வது பாடலில் மீண்டும் வில்லிபுத்தூரார் தம்முள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த திரிபுர ஸம்ஹாரத்தைக் குறிப்பிட்டுச் சிவபிரானைப் போற்றியுள்ளது சிவநேயர்களைப் பெரிதும் களிப்படையச் செய்யும் என்பதில் ஐயமுண்டோ?

தானவர்புரங்கள் நீறெழ முனிந்த
தமனியச் சிலைக்கை வெள்ளூர்தி
ஆனவனமது புரத்தையுஞ் சுடுவான்
அழன்றனன் போலுமென் றஞ்சி
வானவர்நடுங்க வானவர்க் கரசாம்
வலாரியும் மனனுறத் தளர்ந்து
கானவருடனே தக்ககன் என்னும்
கட்செவி கெடுமெனக் கரைந்தான்.

"அசுரர்களின் நகரங்கள் மூன்றும் எரிந்து சாம்பராகும் படிக் கோபித்த பொன்மலையாம் மேருவை வில்லாகக் கையிலேந்திய வெள்ளை விடையை வாகனமகக் கொண்ட சிவபிரான் நமது நகரத்தையும் சுடுமாறு கோபித்து விட்டனனோ என்று பயந்து தேவர்கள் நடுக்கங் கொள்ள, அத்தேவர்க்கு அரசனாகிய இந்திரன், அக்காட்டில் வாழ்பவர்களுடனே தக்ஷகன் என்னும் பாம்பு அழிந்து விடுமே எனப் பெரிதும் கவலையடைந்தான்" என்பது இப்பாடலின் திரண்ட பொருளாகும். சிவபிரானை எந்த அளவுக்குக் கவியின் உள்ளம் மதித்துப் போற்றியது என்பது இப்பாடலின் சொற்களால் தெள்ளத் தெளிவாகின்றது. இதற்கு மாறாக இற்றைநான் வைணவர்களில் பெரும்பாலோர் சிவபிரானை நிந்தித்துப் பேசியும் எழுதிய்ஜ்ம் வருவது காலத்தின் கொடுமை போலும்.

இதுகாறும் நாம் எடுத்துக் காட்டிய ஆதி பருவத்துக் கவிமொழியாக அமைந்த பாடல்கள் சிவபிரானையே வில்லியார் முழுமுதற்கடவுள் என்று உணர்ந்திருந்தார் என்பதைத் தெளிவாக்குகின்றன. இங்ஙனம் நாம் எழுதுவதால் வில்லிபுத்தூரார் திருமாலைக் காவியம் முழுவதிலும் பலவாறாகப் பலவிடங்களில் பாடியுள்ளதைப் பார்க்கவில்லையென்றோ, பார்த்தும் மறந்து விட்டோமென்றோ வாசகர்கள் நினைக்கக் கூடாது. மறந்தும் புறந்தொழார் எனப்படும் வைணவ மரபில் வந்தமையாலும், பாரதக் காப்பியநாயகர்க்குக் கண்ணன் உறவும் நட்புமாகிய காரணத்தாலும் திருமாலையும் அத்திருமாலின் பூரணாவதாரமாக வைணவர்

போற்றும் கண்ணனையும் பாடுங் கடப்பாட்டினராகிய வில்லிபுத்தூரார், சிவபிரானை அத்திருமாலுக்கும் மேலான கடவுள் என்பதை உணர்ந்தது மட்டுமின்றி, சிறிதும் நடுநிலை தவறாது, தமது காவியத்தில் சிவபிரானின் முழுமுதன்மை விளங்குமாறு தமது இதய பூர்வமாகப் பாடிப் போற்றியுள்ளார் என்பதை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். இதில் எவ்வளவு தூரம் நாம் வெற்றியடைந்தோம் என்பதை வாசகர்கள் தீர்ப்புக்கே விடுகின்றோம்.

இனி ஆதிபருவத்தில், கதாபாத்திரங்கள் வாயிலாகவும் சபாபருவத்தில் கவிமொழியாகவும் பாத்திரங்களின் வாயிலாகவும் வில்லிபுத்தூரார் சிவபெருமானின் பெருமையைப எங்ஙனம் புலப்படுத்திகிறார் என்பதை இக்கட்டுரையில் கண்டு இன்புறுவோம்.

ஆதிபருவம் திரௌபதி மாலையிட்ட சருக்கத்தில் குந்தியின் வார்த்தைப்படி திரௌபதியைப் பாண்டவர் ஐவரும் மணக்க நேரிடுகிறது. இதனையறிந்த துருபதராஜன் மனத்தளர்ச்சியடைந்த பொழுது வேதவியாசர் அங்குத்தோன்றி திரௌபதியின் முற்பிறப்பு வரலாற்றைக் கூறி ஐவரும் அவளை மணப்பது சிவபெருமானின் வரம் என்று அறிவுறுத்துகிறார். இவ்வரலாறு **சிவானுக்கிரஹம்** என்ற தலைப்பில் நமது 1981வது ஆண்டு சிவஞானபூஜாமலரில் விரிவாகக் கொடுத்துள்ளோம். இதனைக் கூர்ந்து கவனித்தால் மஹாபாரதத்தின் முக்கிய கதாநாயகர்களின் பிறப்புக்குச் சிவபெருமானே காரணம் என்பதும் அதனால் அவரே மஹாபாரதமென்னும் இதிஹாஸம் நிகழக் காரணம் என்பதும் புலப்படும். பின்னர் ஸ்ரீ கிருஷ்ணர் பாண்டவர்க்குத் துணையாக அமைந்ததும் சிவ சங்கல்பமே ஆகும் என்று அறிஞர்கள் உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

வேதவியாஸர் வாய்மொழியாக திரௌபதியினுடையவும் பாண்டவருடையவும் முற்பிறப்பு வரலாற்றினைப் பதினைந்து பாடல்களில் வில்லிபுத்தூரார் பாடியுள்ளார். இவற்றுள் சிவபிரான் பெருமை கூறும் முக்கிய பாடல்கள் ஐந்து ஆகும். இவற்றுள் மூன்று பாடல்களில் சிவபெருமானது தொன்மைக் கோலமான அர்த்தநாரீசுவரத் திருவடிவம் பேசப்படுகிறது.

1. தன் பங்கைத் திறை நல்கும் ஈசன்
2. தன் ஓர் வடிவில் ஒரு கூறு தையல் ஆளும் முன்னோன்
3. மென்பாவை பங்கன்.

என்பன அப்பாடற் பகுதிகள். இவற்றால் மாதொரு பாகனாகிய திருக்கோலமே புலவரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது என்பதை அறியலாம். மேலும் இரண்டாவது காட்டப்பட்ட பகுதியில் முன்னோன் என்ற சொல் திருவாசகம்,

திருவண்டப்பகுதி 29வது வரியான **"முன்னோன் காண்க முழுதோன் காண்க"** என்பதை நினைவூட்டுகின்றது. எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் முன்னுள்ளவனான முழுமுதற் கடவுள் பரமேசுவரனேயாம் என்னும் பொருள் பயக்கும் முன்னோன் என்ற சொல்லால் இறைவரைப் பாடிய வில்லிபுத்தூராரின் நேர்மையைப் பாராட்டி மகிழ்வோம்.

அடுத்து ஒரு பாடலில் **ஐந்தானனத்தொன்** என்றும் ஐந்தான சொல்லான் என்றும் பரமேசுவரன் குறிப்பிடப்படுகின்றார். சிவபெருமான் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் என்ற ஐந்து திருமுகங்களையுடையவர் என்பது **'ஐந்தானனத்தோன்'** என்பதன் பொருளாகும். 'ஐந்தான சொல்லான்' என்பது ஐந்து எழுத்தான **சிவாயநம** அல்லது **நமச்சிவாய** என்ற ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைக் குறிக்கும். இந்த ஸ்ரீபஞ்சாக்ஷரமே பரமேசுவரரது திருமந்திரமாகவும், திருமேனியாகவும், திருநாமமாகவும் போற்றப்படுதலின் ஐந்தானசொல்லான் என்று சிறப்பித்தார். இவ்வைந்து எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சொல்லாகவும் கூறப்படுதலால் ஐந்து ஆன சொல்லான் என்று பாடியதாகவும் கொள்க. "அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி" என்ற சுந்தரமூர்த்தி நாயனார் திருவாக்கும் காண்க. அடுத்ததொரு பாடலில் சிவபிரான் மழுவாளி என்று குறிப்பிடப்பட்டார்.

ஆதிபருவத்தில் வாரணாவதச் சருக்கத்தில் வீட்டுமனிடம் துரோணர் தமது வரலாறு கூறுவதாகவுள்ள பகுதியில் தனக்கு அசுவத்தாமன் பிறந்தது சிவபெருமான் திருவருளாலேயே எனக்கூறுவதாகப் புலவர் பாடியுள்ளார். **"கந்தமகவை ஈன்ற காலகண்டன் அருளால் வந்த மகவு"** என்பது அப்பாடற்பகுதி.

இதே ஆதிபருவத்தில் சம்பவச் சருக்கத்தில் மான் மடிவெடுத்து இன்பம் நுகர்ந்த ஒரு முனிவன் வாய்மொழியாக "நாரிக்கு ஒரு கூறு நல்கும் அரனார்" என்றும், தீர்த்தயாத்திரைச் சருக்கத்தில் பாண்டியன் மொழியாக "கொன்றை நாள் மலரோன்" என்றும் இவ்வாறு வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் வில்லிபுத்தூரார் சிவபெருமானைத் தாமும் நினைந்து நம்மையும் நினைவு கூரவைக்கின்றார்.

பாரதத்தில் இரண்டாவது பருவமான சபாபருவத்தில் உள்ள கவிமொகழியாகவும், கதாபாத்திரங்களின் வாயிலாகவும் அமைந்த பெருமான் புகழை இனி பார்ப்போம். சபா பருவம் முழுவதிலும் ஒன்பது பாடல்களே சிவபெருமானைப்பற்றியதாக உள்ளன. இவ்வொன்பது பாடல்களிலும் ஒரெ ஒரு பாடலில் தவிர மற்றைய பாடல்களில் சிவபெருமானைக் குறிப்பிட வேண்டிய கதைப்போக்கு ஏதுமில்லையெனினும் சிவபிரானைப் பற்றிப் பாடாதிருக்க இயலாமையாலோ என்னவோ இப்பாடல்களைப் பாடியுள்ளார் என்று நினைக்க வேண்டியுள்ளது.

இப்பருவம் இராசசூயச்சருக்கம், சூதுபோர்ச்சருக்கம் என இருபிரிவுகளையுடையது. இவற்றுள் இராசசூயச்சருக்கம் என்ற முதலாவது பகுதியில் ஆறுபாடல்களில் சிவனாரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஐந்து பாடல்களை ஒவ்வொரு பாடலாகப் பார்ப்போம்.

காண்டவ வனம் அக்கினிதேவனால் எரிக்கப்பட்ட போது மயன் என்ற தேவதச்சன் அதிலிருந்து அருச்சுனனால் அபயம் அளிக்கப்பட்டு உயிர் பிழைக்கின்றான். இந்திரபிரஸ்தத்துக்கு வந்து தான் பெற்ற உயிர் உதவிக்குப் பிரதியுதவியாகப் பாண்டவர்க்குச் சிறந்ததொரு மண்டபத்தை அமைத்துத் தருவேன் என்று கூறி அவன் மண்டபங்கட்டிய செயலை இராசசூயச் சருக்கம் 6வது பாடல் பின்வருமாறு கூறுகிறது.

மீதடுக்கிப் பசும்பொன்னாற் சுவர்செய்து
மரகதத்தூண் வீதிபோக்கி
ஓதிடத்திற் சுருங்காமற் செழுந்துகிர் உத்-
திரம் பரப்பி உலகோரேழும்
மாதிடத்தான் வைகுதற்கு வாய்க்குமதோ
இதுவென்ன வரம்பில் கேள்விச்
சோதிடத்தோர் நாளுரைப்பச் சுதன்மையினும்
முதன்மைபெறத் தொடங்கினானே.

(இதன் பொருள்) சோதிட நூல்வல்லோர் நல்லநாள் சொல்ல, தங்ககட்டிகளை மேலும் மேலும் அடுக்கிச் சுவரைக்கட்டி, மரகதமென்னும் பச்சைமணிக் கற்களால் தூண்களை வரிசையாக நிறுத்தி, சிற்ப சாத்திரங்களில் கூறப்பட்ட இடத்தினளவில் சுருங்காமல் செழுமையான பவழத்தினாலாகிய உத்தரம் போட்டு, ஏழுலகத்து மக்களும் உமையம்மையாரை இடப்பாகத்திலேயுடைய சிவபிரான் வீற்றிருத்தற்கும் இத்தகைய மண்டபம் கிடைக்குமோ என்று அதிசயித்துக் கூறும்படி சுதர்மை என்ற தேவேந்திரசபா மண்டபத்தினும் மேம்படுமாறு மண்டபத்தைக் கட்டத் தொடங்கினான்.

இப்பாடலில் '**மாது இடத்தான் வைகுதற்கு வாய்க்குமதோ**' என்று கூற வேண்டியது அவசியம் தானா? கதையின் போக்குக்கும் இதற்கும் உள்ள இயைபு என்னை> அந்த மண்டபத்தின் சிறப்பை வருணிக்க வேண்டும் எனில் வைணவராகிய புலவர் 'திருமாலுக்கும் வைகுதற்கு வாய்க்குமதோ' என்று கூறியிருக்கலாகாதா? சிவபெருமானைக் குறித்துப் பேச வேறு வாய்ப்பு இப்பருவத்துள் அதிகமாக இன்மையால் எங்கேனும் பெருமானிஅப் பாடியே ஆகவேண்டும் என்ற அவரது அவாதான் இதற்குக் காரணம் என்றால் மிகையாமோ? என்னே வில்லிபுத்தூராரி சிவபக்தி!

இராசசூயயாகம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது அதைச் செய்ய வேண்டியவனான தருமனையும் உடனிருக்க வேண்டிய திரௌபதியையும் அலங்கரிக்கத் தொடங்கினார்கள். முதலில் கங்கை நீர் கொண்டு தீர்த்தமாட்டினார்கள் என்ற செய்தியைக் கவி எங்ஙனம் கூறுகிறார் என்பதை இராசசூயயாகச் சருக்கம் 99வது பாடல் அழகுறக் கூறுதல் காண்க.

கதியொடு பிறைதவழ் கடுக்கைக் காட்டுநல்
நதிதரு புனல்கொடு நானம் ஆட்டினர்
விதிமுறை அறிந்தவர் வேள்விக்கு ஏற்பன
பதியுடன் அணிந்தனர் பாவை தன்னையும்.

(இதன் பொருள்) அடைக்கலம் பெற்று அங்கு வந்த பிறைச்சந்திரன் ஊர்ந்து செல்லும் கொன்றைப் பூமாலையைத் தரித்த சிவபிரானது சடையாகிய காட்டினின்றும் இழிந்த நல்ல நதியாகிய கங்கையினின்றும் கொணர்ந்த தீர்த்தத்தைக் கொண்டு திரௌபதிக்கும் தருமபுத்திரனுக்கும் ஸ்நானம் செய்வித்தார்கள். மேலும் சாத்திரவிதகளை அறிந்தவர்கள் அவர்கள் இருவரையும் யாகச் சடங்குகளுக்கு ஏற்றமுறையில் அலங்கரித்தார்கள்.

புலவர் கூறவந்த செய்தி கங்கை நதியின் தீர்த்தத்தினால் தருமனையும் திரௌபதியையும் நீராட்டினார்கள் என்பதேயாம். ஆனால் கங்கை என்றவுடன் சிவபிரானைக் கூறாதிருக்க முடியுமா? எனவே அப்பெருமானின் சடையினைப் பாடினார். சடைமுடி என்றதும் அதில் தங்கும் கொன்றையையும் பிறைச்ச்சந்திரனையும் நினைவு கூர்ந்தார். பிறைச்சந்திரன் சடைக்காட்டில் ஏன் வந்து தங்கினான்? அதனை விளக்குவார் போல **"கதியோடு பிறைதவழ்"** என்றார். மாமனின் சாபத்தால் இளைத்து வருந்திய சந்திரன் பிரம விட்டுணுவாதி தேவர்கள் எவரிடமும் பாதுகாப்புப் பெறமுடியாமல் சிவபிரானிடம் வந்தே கதி (புகலிடம்) பெற்றான். இது கந்த புராணம் தக்ஷகாண்டத்தில் உள்ளது. சிவபிரானின் பெரும் ஆற்றலையும் எல்லையில்லாத கருணையையும் காட்டுகின்ற இவ்வரலாற்றை நம்மை நினைக்குபடி இப்பாடலை அமைத்த திறம் போற்றுதற்குரியது.

தருமனும் திரௌபதியும் யாகத்துக்கேற்ற முறையில் அலங்காரம் ஆனபிறகு வேள்விச்சாலையில் இருந்த காட்சி இச்சருக்கத்து 104ம் பாடலில் கூறப்படுகிறது.

கடகரி உரிவைபோர்த்த கண்ணுதற் கடவுள்மாறி
இடம்வலம் ஆகப்பாகத்து இறைவியோ டிருந்தவாபோல்
உடல்கலை உறுப்புத்தோலின் ஒளிந்திடப் போர்த்துவேள்விக்
கடனினுக் குரியவெல்லாம் கவினுறச் சாத்தினானே.

வில்லி பாரதத்தில் சிவபிரான் பெருமை

வேள்வி செய்பவன் தனது உடலை மான் தோலினால் போர்த்திக்கொள்ளும் முறைப்படி தருமபுத்திரன் தனது உடல் மூடுமாறி கிருஷ்ணமிருகம் என்ற கருமானின் தோலைப் போர்த்திக் கொண்டான். இது கிருஷ்ணாஜினம் எனப்படும். இதற்கு முன் பாடலில் (பாடல் 103) கூறியபடி திரௌபதியைத் தனது வலப்பக்கத்தில் அமருமாறு செய்தான். இந்தக் காட்சியை, அதாவது உடல் முழுதும் தோலினால் போர்த்த்க் கொண்டு திரௌபதி வலப்பக்கத்தில் வைகும்படி தருமராசன் வேள்வியில் இருந்த காட்சியை, புலவர் பெருமான் தமது மனக்கண்ணில் இருத்திக் காண்கிறார். தருமன் அப்போது இருந்த நிலைக்கு ஒரு உபமானம் கூறவிரும்புகின்றார். அவரது நினைவிலே தோன்றியவன் திருமாலல்லன், பிரம்னல்லன், இந்திரனுமல்லன், பின் எவரெனின் உமாதேவியாரை இடப்பக்கத்தே கொண்ட சிவபிரானேயாவர். சிவபிரானும் கஜா ஸுரன் என்ற யானையின் தோலை உரித்துப் போர்த்தியவர். எனவே கரியமான் தோலைப் போர்த்திய தருமன் கரிய யானையின் தோலைப் போர்த்திய சிவபிரானாகக் காட்சியளித்தது சரியே. ஆனால் திரௌபதி தருமனின் வலப்பக்கத்தேயிருக்க உமாதேவியார் இறைவரின் இடப்பக்கம் அல்லவோ வீற்றிருக்கிறார். இதற்கு என் செய்வது? எப்படியும் இங்கு சிவபெருமானைத்தான் உபமானமாகச் சொல்ல வேண்டும் என்று கவிஞர் உறுதி கொண்டு விட்டபடியால், சிவபெருமான் உமா தேவியாரைத் தமது இடப்பக்கத்திலிருந்து வலது பக்கத்திற்கு இடம் மாற்றி வைத்துக் கொண்டு இருந்ததை ஒத்தது என்று திறம்படக் கூறியுள்ளது சிவநேயர்கள் அறிந்து மகிழ்தற்குரிய தாம். வில்லிபுத்தூராரின் சிந்தனையில் சிவபெருமான் எப்பொழுதும் நீங்காதிருந்தமைக்கு இதுவும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இராசசூயயாகம் நிறைவுற்ற பின்னர், தருமன் முதல் பூசையை யாருக்குச் செய்வது என்று பீஷ்மரைக் கேட்டான். பீஷ்மர் வியஸரை வினவ, அவர் முதற்பூசையைக் கிருஷ்ணனுக்கு செய்யும்படி கூறினார். சபையிலுள்ளோரும் அதை ஒப்பினர். ஆனால் ஒருவன் மட்டும் எதிர்த்துப் பேசினான். அவன் யார் என்பதை இராசசூயச் சருக்கம் 114வது பாடல் கூறுவது காண்க.

பூபாலர் அவையத்து முற்பூசை
பெறுவார், புறங்கானில்வாழ்
கோபால ரோவென்று உருத்தங்கு
அதிர்த்துக் கொதிதோதினான்
காபாலி முனியாத வெங்காமன்
நிகரான கவினெய்தியேழ்
தீபால டங்காத புகழ்வீர்
கயமன்ன சிசுபாலனே.

(இதன் பொருள்) இந்த நிலவுலகத்து அரசர்கள் கூடியிருக்கும் இத சபையில் முதற்பூசை பெறுபவர் முல்லைநிலம் எனப்படும் காட்டில் வாழும் இடையர்களோ எனச் சினங்கொண்டு பேரிரைச்சலோடு கொதித்துக் கூறினான். (யாவன் எனில்) சிவபிரானாற்கோபித்து எரிக்கப்படாத மன்மதனுக்கு ஒப்பான அழகு பெற்று ஏழு தீவுகளிலும் அடங்காத புகழ் உடையவனும் யானை போன்ற வலிமையுடையவனுமான சிசுபாலனாவன்.

இப்பாடலிலும் சிவபிரானைப் பற்றிய கதைத் தொடர்பு ஏதுமில்லை என்பது கவனிக்கத்தக்கது. சிசுபாலன் பேரழகன் என்று கூறவேண்டும். மன்மதன் திருமாலின் மகன். எனவே திருமாலின் மகனான மன்மதனை ஒத்த அழகினன் எனக் கூறலாம். அதே மன்மதன் சம்பான் என்ற அசுரனையழித்தவன். எனவே சம்பராரி எனப்படுபவன் எனவுங் கூறலாம். சிசுபாலன் அழகுமட்டுமல்லாது வீரமும் உடையவன் எனப்படுதால் சம்பாரியான மன்மதனைப் போன்ற அழகுடையவன் என்பதும் பொருத்தமாகலாம். ஆனால் பாரதக்கதையின் பத்து பருவங்களிலேயும் சிவபிரானைப் பாடவேண்டும் என்று உறுதியுடன் இருந்தவராகலின், சிவபிரானைப்பாட வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் பாடுவதை மறக்கவில்லை என்பதே இங்கு காபாலி முனியாத வெங்காமன் அதாவது சிவபிரானால் கோபித்து எரிக்கப்படாத மன்மதன் என்று கூறியதன் காரணம் என்பதில் ஐயமும் உண்டோ?

சிசுபாலன் கண்ணனின் அத்தைமகனாவர். அவன் பிறந்த பொழுதே கண்ணனே அவனைக் கொல்லப்போகிறவன் என்பதை அசரீரி மூமறிந்த தாய், 'யாதுசெய்யினும் என் மகனைக் கொல்லலாகாது' என்று கண்ணனை வேண்ட, அந்த அத்தையின் வேண்டுகோளுக்கிரங்கி இவன் எனக்கு நூறு பிழை செய்யுமளவும் இவன் பிழையை யான் பொறுப்பேன் என்று கண்ணன் கூறினன். அதன்படி இராசசூயயாக சபையில் சிசுபாலன் கண்ணனை நிந்திக்கத் தொடங்கினதும் கண்ணன் சிசுபாலின் நிந்தைகளை நூறு ஆகும் வரை எண்ணிக்கொண்டே வந்து நூற்றுக்குமேற்பட்ட பின்பு பொறுக்கமாட்டாதவனாய்ச் சிசுபாலனுடன் போர் புரியத் தொடங்கினான். சிசுபாலனும் பெரும் வீரனாதலின் கண்ணனுடன் போர் புரிந்தான். அப்போரின் முடிவில் கண்ணனது சக்கரப்படை சிசுபாலனின் தலையைத் துணிந்து விட்டது. சிசுபாலன் உயிர் கண்ணனது திருவடியைச் சென்றடைந்தது. இராசசூயச் சருக்கம் 145 பாடலில் சபையோர் இது கண்டு வியப்படைந்த செய்தி கூறப்பட்டுள்ளதைக் காண்க.

ஈதொரு புதுமை இருந்தவா என்பார்
இந்திர சாலமோ என்பார்
மாதொரு பாகன் அல்லதிக் கண்ணன்
மதிகுலத் தவனலன் என்பார்

கோதொரு வடிவாம் புன்மொழி கிளைஞர்
கூறினும் பொறுப்பரோ என்பார்
காதொரு குழையோன் இளவலைத் தேர்மேல்
கண்டுதம் கண்ணிணை களிப்பார்.

இப்பாடலில் நமக்குத் தேவையானது முன்னிரண்டு அடிகளில் கூறப்பட்ட செய்தியேயாம். சிசுபாலனது உயிர் கண்ணனது திருவடியைச் சென்றடைந்ததும், சபையிலுள்ளோரில், "ஈது ஒரு புதுமையாக இருக்கிறதே! என்பார் சிலர், இது இந்திரசாலமோ என்பார் சிலர், இந்தக் கண்ணன் உமாதேவியாரைப் பங்கிலே கொண்ட சிவபிரானேயல்லாது சந்திர வம்சத்திலே தோன்றிய மானிடனாகமாட்டான் என்று இன்னும் சிலர் கூறுவர்", என்பது அவ்வடிகளின் பொருளாகும். சபையினர் எல்லோருமே இங்ஙனம் ஒருமித்துக் கூறினர் என்று பொருளாகும். சபையினர் எல்லோருமே இங்ஙனம் ஒருமித்துக் கூறினர் என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். இங்கு நேயர்கள் கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. அதாவது கிருஷ்ணன் பூரணாவதாரம். திருமாலுக்கும் கிருஷ்ணனுக்கும் பேதமில்லா வகையில் தான் பாரதமும் புராணங்களும் கூறுகின்றன. சபையிலிருந்த பீஷ்மர், வேத வியாஸர் ஆகியோர் இஃது அறியாதவரல்லர். இக்காவியம் பாடிய வில்லிபுத்தூராரும் இது அறியாதவரல்லர். எனவே கிருஷ்ணன் சந்திரவம்சத்திலே தோன்றிய மானிடனாகான், அவன் வைகுண்டாதிபதியான திருமாலே ஆவன் என்று சபையோர் கருதினர் எனக் கவிஞர் பாடியிருப்பின் எவ்விதமான பிழையும் இல்லை. ஆயின் அவர் அங்ஙனம் பாடவில்லை.

காவியங்களில் தாம் பாடும் தலைவனைத் தனக்கு ஒப்பும் மிக்கும் இல்லாத மிக உயர்ந்தவனாகவே காட்டுவதும், மிக உயர்ந்தவனோடு ஒப்பிடுவதும் புலவர்கள் கையாளும் மரபு. இம்முறையில் கண்ணனைத் திருமாலாகவே சபையோர் கண்டனர் எனக் கூறுவது சாலும் எனினும் அத்திருமாலினும் உயர்ந்த ஒரு புருஷனாகக் கண்ணனைக் காட்டவிரும்பினார் புலவர். அத்தகைய பரமபுருஷன் சிவபிரானேயன்றி வேறுயாவன்? எனவே "மாதொரு பாகனாகிய சிவபிரானல்லது இக்கண்ணன் மதிகுலத்தவன் அலம்" என்று பெருமிதத்தோடு பாடிமுடித்தார். வில்லிபுத்தூரார் சிவபிரானே திருமாலினும் பெரியவன் என்று தெளிவாக அறிந்து கொண்டவர் என்பதற்கு வேறு ஒரு சான்றும் வேண்டுமோ?

சபா பருவத்தில் கதாபாத்திரங்களின் வாய்மொழியாக மூன்று இடங்களில் சிவபிரானைப் பற்றிய குறிப்புக்கள் உளவேனும் முக்கியமான இரண்டிடங்களையே இக்கட்டுரையில் காட்டுவோம். இராசசூயச்சருக்கத்தில் பாண்டவர்களுக்கு முற்பிறப்பினை வியாஸர் மீண்டும் உணர்த்துகிறார். அப்பாடல் வருமாறு:

இங்கிதத்து இந்திரர் என்பர் யாவரும்
சங்கரன் விதியினால் தரணி பாலராய்
வெங்கனல் தோன்றிய மின்னை ஐவரும்
மங்கலம் புவிமகள் வழக்கின் எய்தினீர்.

- இராசசூயச் சருக்கம், 65-ம் பாடல்.

“சிவபிரானை மதியாது தருக்குற்று அதனால் பிலத்தில் அடைக்கப்பட்ட ஐந்து இந்திரர்களாகிய நீவிர் யாவரும் சங்கரன் ஆணைப்படி இப்புவியில் அரசர்களாகத் தோன்றி, யாகத்தழலில் தோன்றிய திரௌபதியை மணந்து கொண்டீர்கள்” என்பது இப்பாடலின் பொருள். எனவே இந்திரர் பூமியில் தோன்றியதும், திரௌபதி யாகதழலில் தோன்றியதும், அவளை ஐவரும் மணந்து கொண்டதும் யாவுமே சிவபெருமானின் கட்டளை என்பது மறுபடியும் இங்கு உணர்த்தப் பெற்றது. அங்ஙனம் இறைவர் ஆணையிட்டது அவர்களுக்கும் இவ்வுலகுக்கும் நன்மை பயக்கவேயாதலின் சிவபெருமானை சங்கரன் என்ற பெயரால் குறிப்பிட்டார். (சம் - நன்மை, கரன் - செய்பவன்).

அடுத்து, மயன் செய்த மண்டபத்தில் தருமன் தம்பியருடன் வீற்றிருந்த போது நாரத முனிவர் விஜயம் செய்தார். அப்பொழுது நாரதரை வரவேற்றுக் கூறிய உபசார மொழியாகத் தருமன் வாய்மொழியாகச் சிவபெருமானைப் புலவர் கொண்டாடுவது இதோ காண்மின்.

“யான்புரிந்த தவமுலகில் யார்புரிந்தார்
அவனிபரில் இசையின் வீணைத்
தேன்புரிந்த தெள்ளமுதால் அமுதுண்டோர்
செவியிரதம் தெவிட்டு விப்பாய்
மான்புரிந்த திருக்கரத்து மதிஇருந்த
நதிவேணி மங்கை பங்கன்
தான்புரிந்த திருக்கூத்துக் கிசையமகிழ்ந்து
இசைபாடும் தத்வ ஞானி.

- **இராசசூயச் சருக்கம், 11-ம் பாடல்.**

இப்பாடலின் பிற்பகுதி இறைவரைப் புகழ்கிறது. ஒரே அடியில் இறைவர் திருக்கரத்தில் மானேந்தியது, தலையிலே பிறைச் சந்திரனைத் தரித்தது, சடையிலே கங்கையைத் தாங்கியது, ஒருபக்கத்திலே உமையம்மையை வைத்தது ஆகிய அருட்செயல்களைப் பாடிச் சிவபெருமானின் பெருமையை நிலை நாட்டிய வில்லிபுத்தூராரின் சிவபக்தியைப் போற்றி மகிழ்வோமாக.

சிவம்.